ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
இலங்கைப் பாராளுமன்றம்
**Parliament of Sri Lanka**

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
## ANNUAL PERFORMANCE REPORT

2025

වැය ශීර්ෂය
**தலைப்பு**
**Head** } **16**



ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව, ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
**இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
**PARLIAMENT OF SRI LANKA, SRI JAYEWARDENEPURA KOTTE**

## இலங்கைப் பாராளுமன்றத்தின் 2025ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை

## தலைப்பு - 16

## <u>உள்ளடக்கம்</u>


| | | |
|---|---|---|
| அத்தியாயம் 1- | நிறுவனத்தின் விவரத் தொகுப்பு | 01 |
| அத்தியாயம் 2- | முன்னேற்றமும் தொலைநோக்கும் | 08 |
| அத்தியாயம் 3- | ஆண்டின் முழுமையான நிதிச் செயலாற்றுகை | 152 |
| அத்தியாயம் 4- | செயலாற்றுகைச் சுட்டி | 154 |
| அத்தியாயம் 5- | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG)களை எய்துவதற்கான செயலாற்றுகை | 157 |
| அத்தியாயம் 6- | மனித வள விவரத்தொகுப்பு | 161 |
| அத்தியாயம் 7- | இணக்க அறிக்கை | 163 |

# அத்தியாயம் - 01

# நிறுவனத்தின் விவரத் தொகுப்பு / செயலாக்கப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

பாராளுமன்றம் என்பது நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய சனநாயகத்தின் மூன்று தூண்களில் ஒன்றான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டவாக்க மன்றம் ஆகும். பாராளுமன்றமானது நாட்டின் அரசியலமைப்பு வாயிலாக மக்களின் அபிலாஷைகளை உறுதிப்படுத்தல், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துதல், சட்டம் இயற்றுதல் மற்றும் பகிரங்க நிதியினைக் கட்டுப்படுத்தல் என்பவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்கின்றது.

இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதாக உள்ளதோடு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 4(அ) உறுப்புரையில் மக்களின் சட்டமாக்கற் தத்துவம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 62ஆம் உறுப்புரை பாராளுமன்றத்தின் பிரதிநிதித்துவ தத்துவத்தைப் பிரதிபலிப்பதோடு, பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அந்த சட்டமாக்கற் தத்துவம் 75ஆம் உறுப்புரையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. 76ஆம் உறுப்புரையில் பாராளுமன்றத்திற்குரிய பாராதீனப்படுத்த முடியாத சட்டமாக்கற் தத்துவம் மற்றும் சட்டம் இயற்றும் விடயத்தில் அது கொண்டுள்ள முக்கிய பணிப்பொறுப்பை எடுத்தியம்புகிறது. அரசியலமைப்பின் 74ஆம் உறுப்புரையின் கீழ், பாராளுமன்ற அலுவல்களை ஒழுங்குறுத்துவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை ஆக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

4(இ) உறுப்புரை, பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள் மற்றும் தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்களின் விடயத்தில் தவிர, மக்களின் நீதிமுறைத் தத்துவமானது நீதிமன்றங்கள் மூலம் பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என குறிப்பிடுகின்றது.

அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறும் 1953ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்தின் மூலமும் பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள் மற்றும் தத்துவங்கள் என்பவற்றின் முக்கியத்துவம் 67ஆம் உறுப்புரையினால் அங்கீகரிக்கப்படுகின்றது. அத்தகைய சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள் மற்றும் தத்துவங்கள் என்பவற்றை பாதுகாப்பதும் மக்களின் நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிப்பதும் நாட்டின் சனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதோடு, 42ஆம் உறுப்புரை மூலமாக நிறைவேற்றுத்துறையைக் கண்காணித்தல்

பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என மேலும் குறித்துரைக்கப்பட்டுள்ளதோடு, அதற்கமைய கண்காணிப்புத் தத்துவத்தைப் பிரயோகிக்கும் பொருட்டு, நிலையியற் கட்டளைகள் மூலம் பாராளுமன்றத்திற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்றமானது பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாடு உடையதாகவிருத்தல் வேண்டும் என 148 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

2001 யூன் 20ஆந் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பின் மூலம், அப்போதைய சபாநாயகரான கௌரவ அநுர பண்டாரநாயக்க பாராளுமன்றத்தின் மீயுயர் தன்மையை மீண்டும் அத்தாட்சிப்படுத்தி உள்ளார்.

இலங்கையானது ஆசியாவிலேயே மிகப் பழமையான சனநாயக நாடாக விளங்குவதோடு, சனநாயகம் மற்றும் நிலைபேறான தன்மை ஆகியவற்றின் நிமித்தம் அதன் பணிப்பொறுப்பை மேலும் பலப்படுத்துவதற்கு, நியதிச்சட்ட முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பணியாட்டொகுதி பாராளுமன்றத்திற்கு உதவுகின்றது. 2012 ஒக்டோபர் 09ஆந் திகதி சபாநாயகர் வழங்கிய தீர்ப்பின் மூலம், சபாநாயகர் அலுவலகம் மற்றும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி ஆகியன அரசியலமைப்பின் பிரகாரம் அதிகாரத்திலும், தத்துவத்திலும் மற்றும் அந்தஸ்த்திலும் ஒப்பற்ற இரண்டு அலுவலகங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் 65(1)ஆம் உறுப்புரையின் மூலம் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தை நியமிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, 65 (3)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சபாநாயகரின் அங்கீகாரத்துடன் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்றது.

செயலகமென்பது அரசாங்க சேவையிலிருந்து சுயாதீனமான அலுவலர்களின் தொழில்சார், பக்கச்சார்பற்ற சேவைக் கட்டமைப்பாகும். அரசியலமைப்பின் 170ஆம் உறுப்புரை மூலமாக பாராளுமன்றச் செயலாளர் நாயகமும் அவரது பணியாட்டொகுதியினரும் பகிரங்க அலுவலர் எனும் வகுதியில் அடங்காத அலுவலர்களாக பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் செயலகத்திற்கு சுயாதீன நிறுவனம் என்ற விசேட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பணியாட்டொகுதியுடன் தொடர்புடைய எல்லா விடயங்களும் 1953 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பாராளுமன்றப் பணியாட்டொகுதி சட்டத்தினூடாக ஒழுங்குறுத்தப்படுகின்றன. அத்தோடு அச்சட்டத்தால் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி தொடர்பில் திணைக்களங்கள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பணியாட்டொகுதி தொடர்பான விடயங்களில் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை

வழங்கவும் வழிகாட்டவும் பணியாட்டொகுதி ஆலோசனைக் குழுவொன்றை தாபிப்பதற்கும் இச்சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் தலைமையிலான பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களது நியதிச்சட்ட முறையிலான மக்கள் ஆணையை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைமுறை சார்ந்த புரிந்துணர்வு, ஆராய்ச்சி, தொழில்நுட்ப மற்றும் நிருவாக ரீதியான ஒத்துழைப்பு வழங்குவதை அச்சட்டம் அதனது அடிப்படைப் பொறுப்பாக கொண்டுள்ளது. பாராளுமன்றத்தினால் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்ற நடைமுறைகளை மக்களுக்கு மிகவும் நெருக்கமாக்குவதற்கும் பாராளுமன்றச் செயலாளர் அலுவலகம் முதன்மையான பணிப்பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது. உன்னதமாக சேவையை வழங்கும் நோக்கத்துடன் 2025ஆம் ஆண்டில் பாராளுமன்றப் பணியாட்டொகுதியினரால் நிறைவேற்றப்பட்டுள்ள பல்வேறு செயற்பாடுகள் தொடர்பான ஓர் அறிமுகத்தை இந்த அறிக்கை தாங்கி வருவதோடு, செலவினத் தலைப்பு 16 இன் கீழ், 2025ஆம் ஆண்டிற்கு ஏற்புடைய ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிக் கூற்று, குறிக்கோள்கள்

### *நோக்கு*

சனநாயகத்தையும் நல்லாட்சியையும் மேம்படுத்துகின்ற பயனுறுதியும் வினைத்திறனும் கொண்ட மக்கள் மைய பாராளுமன்றமாக தோற்றம் பெறுதல்.

### *பணிக்கூற்று*

சட்டம் இயற்றுபவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நாட்டின் பொது நிதிப் பயன்பாட்டினை நுணுக்கமாக ஆராய்பவர்கள் என்ற வகையில் தமது பணிகளை பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறன்மிக்கதாகவும் நிறைவேற்றுகையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவும் நடவடிக்கைமுறை சார்ந்த ஆலோசனைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.

### பாராளுமன்றத்தின் பிரதான குறிக்கோள்கள்

1. மக்களின் சட்டவாக்கத் தத்துவத்தைப் பிரயோகித்தல்
2. பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்
3. நிறைவேற்றுத்துறை மீதான மேற்பார்வையைச் செயற்படுத்தல்

## 1.3 பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திற்குரிய திணைக்களங்கள்

### படைக்கலச் சேவிதர் திணைக்களம்

படைக்கலச் சேவிதர் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை அடையாளப்படுத்தும் “செங்கோல்” இற்குப் பொறுப்பாகவும், சபா மண்டபத்திற்குள் அக்கிராசனத்தினால் விதிக்கப்படும் கட்டளைகளை நடைமுறைப்படுத்துகின்ற அலுவலராகவும் அவர் செயற்படுவார். சபா மண்டபத்திற்குள் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை அடையாளப்படுத்தும் “செங்கோல்” மீதான பொறுப்பையும் பாதுகாப்பையும் கொண்டிருத்தல், சபாநாயகருக்கு சேவை ஆற்றுதல் அத்துடன் நிறைவேற்றுத் தத்துவமுடையவராகத் திகழும் சபாநாயகருக்கு சேவை ஆற்றுவதன் ஊடாக எழும் ஏனைய பணிகளை நிறைவேற்றுதல், பாராளுமன்றச் சபை மற்றும் குழுக்கள் வினைத்திறன்மிக்க வகையில் செயற்படும் பொருட்டு தேவையான உதவிப் பணியாட்டொகுதியும் வசதிகளும் கிடைப்பதை உறுதி செய்வதன் ஊடாக சட்டவாக்கச் செயல்முறைக்கு ஒத்துழைப்பு வழங்குதல் ஆகிய பணிகள் படைக்கலச் சேவிதர் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றன.

பாராளுமன்றத்தின் கௌரவ உறுப்பினர்கள், பணியாட்டொகுதி அங்கத்தவர்கள் மற்றும் அதிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் நேரடி தொடர்பினைக் கொண்டுள்ள பிரிவாக இயங்கும் படைக்கலச் சேவிதர் திணைக்களம் பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்குள் பாதுகாப்பானதொரு சூழலை கட்டியெழுப்புவதற்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது.

## நிருவாகத் திணைக்களம்

பாராளுமன்றத்தின் நிருவாகப் பணிகள் அனைத்தையும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுதல், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி அங்கத்தவர்களின் தனிநபர் ஆளுமை விருத்தி மற்றும் நல்லிருப்பு ஆகியன மீது கவனம் செலுத்தி தமது பணிகளை இடையறாது முன்னெடுத்துச் செல்லலுதல் நிருவாகத் திணைக்களத்தின் பிரதான பணியாகும்.

துரிதமாக மாற்றத்துக்கு உள்ளாகும் ஒரு சூழலில் இந்த உயரிய நிறுவனத்தின் குறிக்கோள்களையும் சவால்களையும் வெற்றிகரமான முறையில் அடைந்து கொள்ளுதல் மற்றும் அனைத்துத் துறைகளிலும் தர ரீதியாகவும் அளவு ரீதியாகவும் சாத்தியப்பாட்டை வெளிப்படுத்துவதற்காக, முடிவுகளை மூலோபாய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சரியான மனப்பாங்குடனும் அறிவுடனும் கூடிய செயலூக்கம் மிகுந்த பணியாட்டொகுதியின் தேவை இனங்காணப்பட்டுள்ளது.

இக்குறிக்கோள்களை அடைந்து கொள்வதில், தமக்குரிய பாரதூரமான பொறுப்பை உணர்ந்துள்ள நிருவாகத் திணைக்களம் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் செயலாற்றுகை, தொடர் அபிவிருத்தி மற்றும் நல்லிருப்பு கருதி உயரிய அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. இந்நோக்கத்திற்காக நேர்மறையானதொரு மாற்றத்தை ஏற்படுத்த அனுதின முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன் மனிதவள முகாமைத்துவத்தில்

சரியான கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைள் ஊடாக நிறுவனத்தை தொழிற்படுத்தும் பொருட்டு மனிதவள கொள்கைகளைத் தீர்மானிப்பதற்கும் வகுப்பதற்குமான தத்துவங்கள் நிருவாகத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டள்ளன.

## ஹன்சாட் திணைக்களம்

உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றும் அனைத்து உரைகளும் உள்ளடக்கப்பட்ட "ஹன்சாட் அறிக்கை" மற்றும் பாராளுமன்றக் குழு அறிக்கைக் குறிப்புக்களைத் தயாரித்தல் ஹன்சாட் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

ஹன்சாட் பதிப்பாசிரியர், ஹன்சாட் பிரதிப் பதிப்பாசிரியர்கள், ஹன்சாட் உதவிப் பதிப்பாசிரியர்கள், சிரேஷ்ட ஹன்சாட் அறிக்கையாளர்கள் மற்றும் ஹன்சாட் அறிக்கையாளர்கள் ஆகிய அலுவலர்களைக் கொண்ட இத்திணைக்களம் குழு அறிக்கையாளர்களைக் கொண்ட ஒரு பிரிவையும், சூசிகை தயாரிப்புப் பிரிவொன்றையும் ஒலிப்பதிவு பிரிவொன்றையும் கொண்டுள்ளது.

பாராளுமன்ற விவாதங்களின்போது வெளிப்படுத்தப்படுகின்றதும் செவிமடுக்கப்படுவதுமான அனைத்துச் சொற்களும் ஹன்சாட் அறிக்கையாளர்களினால் குறிப்பெடுக்கப்பட்டு, அவை கையெழுத்துப் பிரதிகளாக்கப்பட்ட பின்னர் அப்பிரதிகள் மீண்டும் சரிபார்க்கப்பட்டு தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தியமைப்பதற்காக உதவி ஹன்சாட் பதிப்பாசிரியர்களிடம் கையளிக்கப்படும். அவ்வாறு திருத்தப்பட்ட பிரதிகள் அதனையடுத்து ஒவ்வொரு பிரிவின் ஹன்சாட் பிரதிப் பதிப்பாசிரியர்களுக்கும் கையளிக்கப்படும்.

அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளும் ஹன்சாட் பதிப்பாசிரியரிடம் ஒப்படைக்கப்படுவதுடன், அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுவதற்காக அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படுகின்ற இறுதி செய்யப்பட்ட பிரதியை தயாரிக்கும் பொறுப்பு ஹன்சாட் பதிப்பாசிரியருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்

பாராளுமன்றக் கட்டடத் தொகுதி, சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம், சிராவஸ்தி மாளிகை, மாதிவெல மற்றும் ஜயவடனகம வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ள கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பணியாட்டொகுதி உறுப்பினர்களினதும் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் நுவரெலியாவில் அமைந்துள்ள சேனாதிபதி இல்லம் ஆகியவற்றிற்குத்

தேவையான சிவில் பராமரிப்பு பணிகளுக்காக 1990ஆம் ஆண்டில் இத் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

மின்னுயர்த்திகள், மத்திய வளிச்சீராக்கல் தொகுதி, மறைகாணி முறைமை (CCTV), பிரதான தொலைக்காட்சி அன்டெனா தொகுதி (MATV), ஒலிக் கட்டுப்பாட்டு முறைமை, குளிரூட்டி அறைகள் போன்ற அனைத்து சேவை மற்றும் உபகரண தொகுதிகளின் சிறந்த தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துதல் மற்றும் இணைந்த திணைக்களங்களின் பராமரிப்புப் பணிகளுக்கான பொறுப்பினை வகித்தல் (இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை) இத்திணைக்களத்தின் கீழ் இடம்பெறுகின்றன. பாராளுமன்றக் கட்டடத் தொகுதியின் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் மற்றும் கட்டடத் தொகுதியில் புதிய நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல், புதிய நிர்மாணப் பணிகளுக்கான விலை மனுக்கோரல் ஆவணங்களை தயாரித்தல் அத்துடன் மின் உபகரணங்கள் மற்றும் தொகுதிகளை பராமரிப்பதற்குத் தேவையான பழுதுபார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்

இலங்கைப் பாராளுமன்றம் 1982ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே புதிய பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களமானது, நட்சத்திர அந்தஸ்த்தினைக் கொண்ட ஹோட்டல் தொழிற் துறையில் சர்வதேச அளவில் முதன்மையான ஒரு ஹோட்டலாக இருந்த *ஒபரோய்* ஹோட்டலின் தொழில்நுட்ப மற்றும் தொழில்வாண்மை நிபுணத்துவ தொழிற்படுத்தல் மற்றும் ஆலோசனையின் கீழ் பாராளுமன்றத்தில் புதியதொரு திணைக்களமாக தோற்றம் பெற்றது. பிற்காலத்தில் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் இணைந்த இத்திணைக்களம் இற்றைவரை இயங்கி வருகிறது.

இப்பிரிவு உணவு வழங்கல், வீடு பராமரிப்புச் சேவைகள் பணிப்பாளரின் பொறுப்பில் சமையலறை, உணவுச்சாலைகள் மற்றும் வீடு பராமரிப்பு ஆகிய மூன்று பிரதான பிரிவுகளின் கீழ் இயங்குகின்றது.

பிரதானமாக உணவு பான மற்றும் 12 உணவுச்சாலை சேவைப் பிரிவுகளைக் கொண்ட இத்திணைக்களம் உணவகம், நிறைவேற்றுத் தரத்தினருக்கான உணவுச் சாலை, உணவு மற்றும் வழங்கல் பிரிவு, பிரமுகர்களுக்கான உணவுச்சாலை போன்றவற்றை உள்ளடக்குவதோடு, இவற்றுள் ஐந்து பிரிவுகள் நாளாந்தம் இயங்குவதுடன் பாராளுமன்ற அமர்வு நடைபெறும் நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் ஒரு நாளில் 1000 -1200 பேருக்கு உணவு வசதிகளை வழங்குகின்றன.

திணைக்களத்தின் மற்றுமொரு பிரதான கடமைப் பணி யாதெனில், ஐந்து மாடிகளைக் கொண்ட முழு கட்டடத் தொகுதியில், விசேட பிரமுகர்களின் தேவைகளுக்கு அமைவாக உயர்தரத்தில் துப்பரவேற்பாட்டு பணிகளையும் வீடு பராமரிப்பு பணிகளையும் நிறைவேற்றுவதாகும். மேலும், கடமை மற்றும் தொழில்வாண்மை மட்டத்தில் பாராளுமன்ற வளவினை பயன்படுத்துகின்ற அனைவருக்கும் பொருத்தமானவாறு வீடு பராமரிப்பு சேவையினை உரிய முறையில் பேணி வருவதும் அத்திணைக்களத்தின் பணியாகும்.

## தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களம்

பாராளுமன்றத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேவைகளுக்கான பொறுப்பினை தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களம் கொண்டுள்ளது. தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களம் 2004ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தாபிக்கப்பட்டது. புதிய தொழில்நுட்பம் கலந்த தகவல் முறைமைகள் ஊடாக பங்குதாரர்கள் வலுவூட்டப்படுவதை தமது நோக்கமாகக் கொண்ட தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களமானது பாராளுமன்றச் செயலாளர் அலுவலகத்தின் பணிகளை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டுசெல்ல தற்போது சிறப்பான பணிப்பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது. பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் மற்றும் முக்கிய விடயங்கள் தொடர்பான அறிவு மற்றும் தகவல்கள் ஊடாக பொதுமக்களை வலுவூட்டுதல் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு அவர்களுக்கு சரியானதும் காலோசிதமானதுமான தகவல்களை வினைத்திறன்மிக்க வகையில் வழங்குதல் இத்திணைக்களத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

## சட்டவாக்கச் சேவைகள் திணைக்களம்

பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றும் செயல்முறைக்கு ஒத்துழைப்பு நல்குதல், சட்டவாக்கத் துறையின் பணிகளை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுதல், நிறைவேற்றுத்துறையானது பாராளுமன்றம் மற்றும் பொது மக்களின்பால் கொண்டுள்ள பொறுப்பினையும் பொறுப்புடைமையையும் உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு குழுக்களின் மூலம் மேற்பார்வை செய்தல் மற்றும் பகிரங்க நிதிகளின் கட்டுப்பாடு பற்றிய நடவடிக்கைகளை வினைத்திறனுடன் நெறிப்படுத்துதல், சட்டம் இயற்றுநர்கள் என்ற வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான ஆராய்ச்சி மற்றும் விவாதிக்கப்படுகின்ற விடயங்களுக்கான தகவல்களை வழங்குதல், சட்டவாக்கச் செயற்பாட்டில் இணைப்பு மொழியுடன் அரச மொழிக் கொள்கையை அமுலாக்குதல், சட்டமூலங்கள், கட்டளைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் முதலிய துணைச்சட்டவாக்கங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் என்பவற்றின் செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்னிலைப்படுத்துதல், பாராளுமன்றம் அவற்றை உரியமுறையில் நிறைவேற்றுவதற்கான பணிகளை

ஒருங்கிணைத்தல், பாராளுமன்ற அமர்வுகளுக்குரிய ஒழுங்குப் பத்திரங்கள், ஒழுங்குப் புத்தகங்கள் அல்லது அத்துடன் தொடர்புடைய அநுபந்தங்கள், கூட்டக் குறிப்புகள், தினப் பணிகள் என்பவற்றை மூன்று மொழிகளிலும் தயாரித்து வழங்குவதற்கான அனைத்துக் கருமங்களுக்கும் முனைப்பான பங்களிப்பை சட்டவாக்கச் சேவைகள் திணைக்களம் அளிக்கின்றது.

## நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம்

நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம் பாராளுமன்றத்தின் முகாமைத்துவ பணிகளில் பிரதானமானதொரு பணியினை மேற்கொள்கின்றது. பணிப்பாளர் (நிதி), நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களத்தின் பிரதானியாவார். கணக்கீட்டு அலுவலரான நிதிப் பணிப்பாளர் நிதிச் செயற்பாடுகள் சாரந்த தகவல்களை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திற்கு நேரடியாக அறிக்கையிடுதல் மற்றும் ஆலோசனை வழங்குதலை மேற்கொள்கின்றார்.

கணக்கீட்டு அலுவலராக தன்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற வழமையான பொறுப்புகளை நிறைவேற்றுதல் மற்றும் அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள், சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகளுக்கமைவாக நிதி முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக நிதிக் கட்டுப்பாட்டுப் பணிகளை நிறைவேற்றுவதும் சொத்துக்களின் பாதுகாப்பையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்துதல், போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை நடைடுமுறைப்படுத்துதல் ஆகிய விடயங்களும் பணிப்பாளரின் (நிதி) கீழ் காணப்படுகின்ற பிரதான பணிப்பொறுப்புகள் ஆகும்.

## தொடர்பாடல் திணைக்களம்

பொதுமக்களுக்கு தகவல்களைக் கொண்டு சேர்க்கும் தரப்பினர் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வினைத்திறன்மிக்க ஒரு மக்களை மையப் பாராளுமன்றமாக தற்போதைய பாராளுமன்றத்தை விருத்தி செய்யும் நோக்கத்துடன் 2019ஆம் ஆண்டில் தொடர்பாடல் திணைக்களம் தாபிக்கப்பட்டது. தொடர்பாடல் பணிப்பாளரினால் வழிநடத்தப்படும் இத்திணைக்களம், இலங்கைப் பாராளுமன்றம், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரசைகள், ஊடகங்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சமுதாயக் குழுக்கள் ஆகியவற்றுக்கு இடையிலான இடைவினைச் செயற்பாடுகளின் பண்புத் தர மேம்பாட்டை தனது நோக்காகக் கொண்டுள்ளது. ஊடகப்பிரிவு, பொதுமக்கள் சேவைகள் பிரிவு ஆகிய இரு பிரிவுகளின் இரண்டு முகாமையாளர்களின் கீழ் இத்திணைக்களத்தின் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களமானது தொடர்பாடல் விடயங்களை முகாமைத்துவம் செய்தல், தொடர்பாடல் மூலோபாயங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் மற்றும் தொடர்பாடல் திட்டங்கள் அனைத்தையும் வகுத்தமைக்கும் பணியையும் மேற்கொள்கின்றது.

திணைக்களத்தின் ஊடகப் பிரிவானது கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் பதிப்பித்தல் போன்றவற்றை நிறைவேற்றுவதுடன், பொதுமக்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் சிறந்த இடைவினைத் தொடர்புகளை பேணிவருதல் மற்றும் வெளிப்படையான மக்கள் பங்கேற்புக்கான வசதிகளை ஏற்படுத்தல் பொதுமக்கள் சேவை பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு

கௌரவ சபாநாயகர் முதன்மை வகிக்கின்ற பாராளுமன்றத்தின் கடமைகளை வினைத்திறன்மிக்க வகையில் ஆற்றுவதற்குத் தேவையான செயலக மற்றும் பணியாட்டொகுதிச் சேவைகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியினால் வழங்கப்படுகின்றன. (நிறுவனக் கட்டமைப்பை அறிந்துகொள்ள தயவுசெய்து இணைப்பு 01ஐப் பார்க்கவும்)

# அத்தியாயம் - 02

# முன்னேற்றமும் தொலைநோக்கும்

## பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் கூற்று

சனநாயக ஆட்சி முறைமையொன்றில், மக்களின் இறைமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மிக முக்கியமான நிறுவனமாக பாராளுமன்றம் திகழ்கின்றது. ஒரு நாட்டின் சனநாயகத்தைப் பாதுகாப்பதில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான பணிப்பொறுப்புகள் மிகச் சிறப்பு வாய்ந்தவையாகும். அவற்றுள் மக்கள் பிரதிநிதித்துவம் (Representation), சட்டவாக்கம் (Legislation), நிறைவேற்றத் துறையை கண்காணித்தல் மற்றும் சமநிலைப்படுத்துதல் (Oversight and Accountability) மற்றும் நிதிசார் கட்டுப்பாடு (Financial scrutiny) என்பவற்றை பிரதானமானவையாகக் குறிப்பிட்டாலும், சனநாயக ரீதியான அரச முறைமையொன்றை வழிநடத்திச் செல்லும் அடிப்படை பணிப்பொறுப்பும் பாராளுமன்றத்திற்குரியதாகும். அரச நிதி நிருவாகத்தை மிகவும் முறையான வகையில் பேணியவாறு, சட்டவாக்கப் பணிகளில் ஈடுபட்டு வருகின்ற இலங்கைப் பாராளுமன்றமானது, தற்போது முன்னொருபோதும் இல்லாத வகையில் இலங்கைப் பிரசைகளுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.

இலங்கைப் பாராளுமன்றமானது, தெற்காசியாவின் மிகப்பழைமையான பாராளுமன்ற சனநாயக ஆட்சி முறையைக் கொண்டுள்ளது. ஆதலால், அதனுள் தனிநபர் சுதந்திரம், பிரதிநிதித்துவச் சனநாயகம் மற்றும் பிரசைகளின் கடமைகள் குறித்த அர்த்தமுள்ள தொலைநோக்கும், விழிப்புணர்வும் அவசியமான காலகட்டமொன்று தோன்றியுள்ளது. இலங்கைப் பாராளுமன்றம், மேற்படி இலக்குகளை அடையும் பொருட்டு 2025ஆம் ஆண்டில், சட்டவாக்கச் செயன்முறைகள் ஊடாக மாத்திரமன்றி, பாராளுமன்றச் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் குறித்து இந்நாட்டு மக்களை விழிப்புணர்வூட்டி பல்வேறு வழிமுறைகள் மற்றும் தளங்கள் ஊடாக மிகவும் பயனுள்ள வகையில் பொது மக்களை அணுகுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள முதன்மைச் சட்டவாக்கப் பணிப்பொறுப்பான சட்ட வகுப்புச் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட நடைமுறைகளை, அரசியலமைப்புக்கும், பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் விதிகளுக்கும் இணங்க செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் 2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, 2025ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அரசாங்க சட்டமூலங்களின் எண்ணிக்கை 26ஆகக் காணப்படுவதுடன், அவை அனைத்திற்கும் கௌரவ சபாநாயகர் தமது சான்றுரையைப் புறக்குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டின் பிரதிநிதித்துவ சனநாயகத்தின் மிக முக்கியமான அம்சம் யாதெனில், மக்கள் பிரதிநிதிகள் தங்கள் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதாகும். அதற்கமைய, 2025ஆம் ஆண்டில் 111 பாராளுமன்ற அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்காக, பாராளுமன்ற அமர்வுகளுடன் தொடர்புடையதாக சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்துள்ள பிரேரணைகள் மற்றும் வினாக்களை உள்ளடக்கிய 02 பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகங்களும், அவற்றுடன் தொடர்புடைய 38 அனுபந்தங்களும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சபை ஆவண அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டு, அவை அரசாங்க அச்சகத்தின் உதவியுடன் அச்சிடப்பட்டதன் பின்னர், அந்த அச்சிடப்பட்ட அனைத்து ஆவணங்களும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சின் செயலாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட நியதிச்சட்ட நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள், பாராளுமன்றம், தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள் என்பவற்றின் தலைவர்களுக்கும், சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகளுக்கும் உள்நாட்டு அதிவேகத் தபால் சேவை ஊடாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், 2025ஆம் ஆண்டில் அமைச்சுகள், அவற்றின் கீழ் வரும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்கச் சபைகளுடன் தொடர்புடையதாக அந்தந்த அமைச்சுகளினால் அனுப்பி வைக்கப்படும் 451 செயலாற்றுகை மற்றும் வருடாந்த அறிக்கைகள், பல்வேறு சட்டங்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளைக் கொண்ட பிரேரணைகளையும், தீர்மானங்களையும் உள்ளடக்கிய துணைச் சட்டங்கள் (Subordinate Legislation) என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தின் பொது மக்கள் பிரதிநிதிகளினால் சமகாலத்தில் முக்கியத்துவம் பெறும் பிரச்சினைகளுடன் தொடர்புடையதாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் வினாக்கள் மிகவும் முக்கியமானவையாகும். அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர்களினால் கையளிக்கப்பட்ட 728 வாய்மூல விடைக்கான வினாக்களும், 45 எழுத்துமூல விடைக்கான வினாக்களும் பதிவுச் செய்யப்பட்டு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமையத் தொகுக்கப்பட்டு, உரிய வகையில் ஏனைய மொழிகளுக்கு (சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம்) மொழிபெயர்க்கப்பட்டதன் பின்னர், அவற்றை பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் அல்லது உரியவாறு ஒழுங்குப் புத்தக அனுபந்தங்களில் உள்ளடக்குவதற்குகான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுக்கள், ஏனைய நிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய விபரங்களை விரைவாகப் பெற்றுக்கொள்ளும் வகையில், பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகங்கள், ஒழுங்குப் புத்தகத்துடன் தொடர்புடைய அனுபந்தங்கள், பாராளுமன்ற அமர்வுகளுக்கான ஒழுங்குப் பத்திரங்கள் மற்றும் கூட்டக்குறிப்புகள், அத்துடன் பாராளுமன்றத்தின் எதிர்வரும் அமர்வு தினங்களுக்காகத் தீர்மானிக்கப்பட்டுள்ள சபை அலுவல்கள் பற்றிய தகவல்கள் என்பவற்றை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரித்து, அவற்றை பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் மிகத் துரிதமாக இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதுமாத்திரன்றி, 2025ஆம் ஆண்டில் பாராளுமன்ற அமர்வுகளின் போது சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு அரச நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கைகள், வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள் என்பவற்றை மென்பிரதி வடிவில் இணையதளத்தில் பதிவேற்றுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்ற நடவடிக்கைகள் குறித்த வெளிப்படைத்தன்மை, பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை பேணுவதற்காக 2025ஆம் ஆண்டில் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தகவல் அறியும் பிரிவுக்கு, 2025ஆம் ஆண்டில் 216 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றுள் தகவல்கள் வழங்க மறுத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 71 ஆகும். மேலும் 2025ஆம் ஆண்டில் குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 46 ஆகும்.

பாராளுமன்றப் பாரம்பரியம், செயற்பாடுகள் மற்றும் அதன் நவீன போக்குகள் குறித்த சிறந்த புரிதலைக் கொண்டிருப்பது ஒரு நாட்டின் பிரசைகள் என்ற ரீதியில் குடிமக்களின் பொறுப்பாகும். எனவே, இலங்கைப் பாராளுமன்றத்தை மக்களைப் மையப்படுத்திய நிறுவனமாக மாற்றுவதற்காக நிறுவப்பட்ட தொடர்பாடல் திணைக்களத்தின் ஊடாக, 2025ஆம் ஆண்டில் பாராளுமன்ற நடவடிக்கைகள் குறித்த மிகவும் உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, 2025ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து மும்மொழிகளிலும் 450 இற்கும் அதிகமான ஊடக அறிக்கைகள் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுக்கிணையாக, பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ சமூக ஊடகத் தளங்களும்

இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், பாராளுமன்ற அமர்வுகளை நேரடியாக ஒளிபரப்புச் செய்தல், பாராளுமன்றம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக பல்வேறு செவிப்புல, கட்புல தயாரிப்புகளை உருவாக்குதல் மற்றும் பாராளுமன்றத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்கு ஊடகங்களை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை பாராளுமன்றத்திற்கு வருகை தரும் இராஜதந்திரிகள், விசேட பிரமுகர்கள் உள்ளிட்ட அனைத்து விருந்தினர்களையும் வரவேற்பது, அவர்களைத் தெளிவூட்டுவது மற்றும் பாராளுமன்றம் பற்றிய முறையான புரிதலை வழங்குவது பாராளுமன்றத்தின் மிகச்சிறப்பான பணியாகும். அதன்படி, 2025ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்கு வருகை தந்த 117,352 விருந்தினர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதுடன், இதில் இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்த 900 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் உள்ளடங்குகின்றனர். அத்துடன், பாராளுமன்ற முறைமை மற்றும் நடைமுறைகள் குறித்து பொதுமக்களுக்கும், பல்கலைக்கழக சமூகத்தினருக்கும், பாடசாலைச் சமூகத்தினருக்கும் மற்றும் பிற நிறுவனங்களுக்கும் நேரில் சென்று விழிப்புணர்வூட்டும் பணிகளும் கடந்த ஆண்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, பாராளுமன்றம் பற்றிய 34 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும், 27 மாணவர் பாராளுமன்ற அமர்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தின் பணிகளை மிகவும் வினைத்திறனுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுத்துச் செல்வதற்காக பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தின் கீழ் இயங்கும் படைக்கலச் சேவிதர் திணைக்களம், நிருவாகத் திணைக்களம், சட்டவாக்கச் சேவைகள் திணைக்களம், நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம், ஹன்சாட் திணைக்களம், உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம், இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம், தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் தொடர்பாடல் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன.

*ஒப்பம்* **குஷானி ரோஹணதீர**

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திற்குரிய திணைக்களங்கள் 2025ஆம் ஆண்டில் நிறைவேற்றி உள்ள பணிகளின் முன்னேற்றம் பின்வருமாறு.

## சட்டவாக்கச் சேவைகள் திணைக்களம்

இத்திணைக்களம் சட்டம் இயற்றுதல் மற்றும் பொதுமக்களின் நிதி கையாளப்படுவதைக் கண்காணித்தல் போன்ற துறைகள் தொடர்பான தொழில்சார் சேவைகளை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குகின்றது.

பின்வரும் அலுவலகங்கள் சட்டவாக்கச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் தொழிற்படுகின்றன. அவையாவன,

1. சபை ஆவண அலுவலகம்
2. சட்டமூல அலுவலகம்
3. அமைச்சுசார் ஆலோசனைக் குழு அலுவலகம்
4. குழு அலுவலகம் I
5. அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அலுவலகம்
6. அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அலுவலகம்
7. துறைசார் மேற்பார்வைக் குழு அலுவலகம் (குழு அலுவலகம் II)
8. பொது மனுக்குழு அலுவலகம்
9. உரை பெயர்ப்பாளர் அலுவலகம்
10. நூலகம்

இந்த ஒவ்வோர் அலுவலகத்தினாலும் 2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் செயலாற்றுகை விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

## சபை ஆவண அலுவலகம்

**பணிக்கூற்று**

பாராளுமன்றத்தின் சட்டவாக்கச் செயன்முறைக்கு ஏற்புடைய சபையின் சகல நடவடிக்கைகளையும் வினைத்திறன் மற்றும் பயனுறுதியாக நிறைவேற்றத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

**முக்கிய பணிகள்**

(1) 2025ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 111 பாராளுமன்ற அமர்வு நாட்களை முன்னிட்டு, அவற்றுக்கு ஏற்புடையதாக எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பிரேரணைகள் மற்றும் வினாக்களை உள்ளடக்கிய 02 ஒழுங்குப் புத்தகங்களும், 38 அநுபந்தங்களும் சபை ஆவண அலுவலகத்தால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு, அரசாங்க அச்சகத்தால் அவை அச்சிடப்பட்டதன் பின்னர் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சுகளின்

செயலாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட நியதிச்சட்ட நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள், பாராளுமன்றம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் உரிய அலுவலர்களுக்கும் உள்நாட்டு விரைவுத் தபால் சேவை மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அடுத்து வரும் அமர்வு நாளில் உறுப்பினர் ஒவ்வொருவரினதும் சபா மேசையில் அவற்றை வைக்கவும், பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(2) 2025ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 111 பாராளுமன்ற அமர்வுகளுக்காக தயாரிக்கப்பட்ட 111 ஒழுங்குப்பத்திரங்கள் சபை ஆவண அலுவலகத்தால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு, அரசாங்க அச்சகத்தால் அவை அச்சிடப்பட்டதன் பின்னர் அமர்வு நாட்களில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரதும் மேசையின் மீது வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படும் ஒவ்வொரு மாதத்திலும் அமர்வு வாரத்தின் முதலாவது அமர்வுத் திகதிகளில் மட்டும் சம்பந்தப்பட்ட ஒழுங்குப் பத்திரத்தை சம்பந்தப்பட்ட சகல அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சுகளின் செயலாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட நியதிச்சட்ட நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள் அத்துடன் பாராளுமன்றம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் உரிய அலுவலர்களுக்கும் உள்நாட்டு விரைவுத் தபால் சேவை மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(3) சபை ஆவண அலுவலகத்தால், குறித்த வருடத்தில் நடத்தப்பட்ட 111 பாராளுமன்ற அமர்வுகளுக்கு ஏற்புடைய 111 கூட்ட அறிக்கைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு அவற்றை அரசாங்க அச்சகத்தால் அச்சிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(4) அமைச்சுகள், அவற்றின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கு ஏற்புடையதாக, அந்தந்த அமைச்சுகளால் ஆற்றுப்படுத்தப்பட்ட 451 செயலாற்றுகை மற்றும் ஆண்டறிக்கைகள், பல்வேறு சட்டங்களுக்கு உட்பட்டதாக தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகள் உள்ளடங்கிய பிரேரணைகளையும், தீர்மானங்கள் உள்ளிட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும்

(Subordinative Legislation) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(5) பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வாய்மூல விடைகளுக்கான 728 வினாக்களும், எழுத்துமூல விடைகளுக்கான 45 வினாக்களும் பதிவுசெய்யப்பட்டு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக அவற்றைப் பதிப்புச்செய்து ஏற்புடையவாறு ஏனைய மொழிகளுக்கு (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) மொழிபெயர்க்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் புத்தகத்தில் அல்லது ஏற்புடையவாறு அநுபந்தங்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(6) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2)இன் கீழ் 124 வினாக்களும் பிரதமரிடம் கேட்கப்படும் 30 வினாக்களும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டனவா என்பதை ஆராய்ந்து உரியவாறு தினப் பணி (Order of Business)களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(7) சனாதிபதியிடமிருந்து கிடைத்த 14 செய்திகள், சபாநாயகரின் 179 அறிவித்தல்கள், 71 தனியார் உறுப்பினர் பிரேரணைகள், திகதி குறிப்பிடப்படாத 05 பிரேரணைகள், 35 சிறப்புரிமை வினாக்கள், அரசாங்கத்தின் 34 சட்டமூலங்கள், 11 தனியார் உறுப்பினர் சட்டமூலங்கள், சில சட்டமூலங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்மானங்கள் அத்துடன் கௌரவ சபாநாயகரினால் முன்னிலைப்படுத்தப்படும் ஆவணங்கள் மற்றும் அமைச்சர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அடங்கலாக 111 பாராளுமன்ற அமர்வு நாட்களுக்கான தினப் பணி (Order of Business)களை ஒழுங்குசெய்து அதற்குரிய ஆவணங்ளை அச்சிட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்குவதற்கும், அத்தகைய ஆவணங்களை பாராளுமன்றத்தின் ஏனைய திணைக்களங்களினதும் அலுவலகங்களினதும் தகவலுக்காக பாராளுமன்ற உள்நிறுவன வலையமைப்பில் தரவேற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(8) 2025ஆம் ஆண்டில் காலஞ்சென்ற 28 கௌரவ உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அனுதாபப் பிரேரணைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதையொட்டி தயாரிக்கப்பட்ட ஹன்சாட் அறிக்கையின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதியை பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் கையொப்பத்துடனான தழுவல் கடிதத்துடன் காலஞ்சென்ற உறுப்பினரின் வாழ்க்கைத் துணைக்கு அல்லது அவரின் நெருங்கிய உறவினர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(9) பாராளுமன்றக் கூட்டங்களுக்கு ஏற்புடையதாக கௌரவ சபாநாயகரினால் வாசிக்கப்படுகின்ற சிறப்பு அறிவித்தல்களையும் தீர்மானங்களையும் தயாரிக்க ஒத்துழைப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(10) பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுவதை எளிதாக்குவதற்கு, அக்கிராசனத்திற்கும் செயலாளர் குழாத்திற்கும் சகல ஆவணங்கள் அடங்கிய கோப்புகளைத் தனித் தனியாக தயாரித்தல். 111 கூட்ட அமர்வு நாட்களுக்கு ஏற்புடையதாக இப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

(11) சபை ஆவண அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளரால் 2025ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பாராளுமன்றத்தின் 111 அமர்வு நாட்கள் சம்பந்தப்பட்டதாக, பாராளுமன்ற அமர்வு தொடங்குவதற்கு முன் சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் உட்பட்ட தவிசாளர் குழாத்திற்கும், பாராளுமன்றச் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம் உட்பட்ட செயலாளர் குழாத்திற்கும் உரிய நாளுக்கான தினப் பணிகளின் ஒழுங்குமுறை பற்றி சுருக்க விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

(12) 2025ஆம் ஆண்டில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு 27 தடவைகள் கூடியுள்ளதோடு, இதற்கு மேலதிகமாக கட்சித் தலைவர்களுக்கான 02 கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. அக் கூட்டங்களை நடத்துவதற்கான அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளும், அந்தக் கூட்டங்களின் முடிந்த பின்னர் கூட்ட அறிக்கைகளை மும்மொழிகளில் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(13) 2025ஆம் ஆண்டில் பின்வரிசை உறுப்பினர் குழு ஒரு தடவை கூடி உள்ளதுடன், அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளும், அந்தக் கூட்டம் முடிந்த பின்னர் கூட்ட அறிக்கையை மும்மொழிகளில் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(14) 2025ஆம் ஆண்டில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை விழிப்புணர்வு செய்யும் 04 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், வெளி நாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு போன்ற நிறுவனங்களின் கோரிக்கைக்கு அமைய அந்நிறுவனங்களால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் வசதிகளை ஏற்பாடும் செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(15) பாராளுமன்ற உறுப்பினர்களின் அனைத்து தரவுகள் மற்றும் தகவல்கள் அடங்கிய கணினி மென்பொருள் நிரலைப் பேணி வருதல் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பல்வேறு கோரிக்கைகள் அத்துடன் பிற தேவைப்பாடுகளின் அடிப்படையில் அவற்றைத் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(16) பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை சிங்கள அகரவரிசைப்படியும் அவர்களின் மூப்புரிமைக்கு ஏற்பவும் சட்டவாக்கத் தகவல்களை கணினி முறைமையில் தனித்தனியாக பேணவும், பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புகளை நடத்துவதற்காக உரிய பெயர்களைச் சிங்கள அகரவரிசைப்படி ஆங்கில மொழியில் தயாரித்து, பொழிப்புகளுடன் இற்றைப்படுத்தி பேணிவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(17) பல்வேறு கட்டளைச் சட்டங்களுக்கு உட்பட்டதாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்கள் (Subordinate Legislation) பற்றிய நீதிமன்ற நடவடிக்கைகளில், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் சார்பில் அவசியமானவிடத்து சாட்சியமளிப்பதற்கும் அதற்குரிய தகவல்களை அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(18) கௌரவ சபாநாயகர் மற்றும் அல்லது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டு / உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், அத்தகைய மனுக்கள் பற்றிய எழுத்துமூல அவதானிப்புகளைத் தயாரித்தல், பதிலாள் பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் பிற ஆவணங்களைப் பொருத்தமான வகையில் தயார்செய்தல் அத்துடன் சட்டத்துறை தலைமை அதிபதியுடன் அதற்கான கடிதப் பரிமாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயர் நீதிமன்றத்தில் இந்த விடயம் சம்பந்தமாக 2025ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீதான ஒரு வழக்கு மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 04 எழுத்தாணை மனுக்கள் மீதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பதவியை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீடு மற்றும் அதையொட்டி வழங்கப்பட்ட தீர்ப்பு தொடர்பான அடுத்தகட்ட நகர்வை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(19) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 66 மற்றும் 89ஆம் உறுப்புரைகளுக்கு இணங்க, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆசனம் வறிதாகும்போது 1988ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான,

1981ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் 2025ஆம் ஆண்டில், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு மும்மொழிகளிலும் எழுத்துமூலம் அறிவித்தல் மற்றும் அதன்படி, பாராளுமன்றத்தில் ஆசனம் வறிதாகிய 04 சந்தர்ப்பங்களில் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், புதிதாக தெரிவுசெய்யப்பட்ட நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தில் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரையை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(20) அமைச்சுசார் ஆலோசனைக் குழு அறிக்கைகள், ஏனைய குழுக்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற குழு அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை தேவைக்கேற்ப பாராளுமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(21) பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகள், பிற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய விவரங்களைத் துரிதமாக பெற்றுக்கொள்ளக் கூடியவாறு, பாராளுமன்றத்தின் ஒழுங்குப் புத்தகங்கள், அவற்றுக்கான அநுபந்தங்கள், ஒழுங்குப் பத்திரங்கள் மற்றும் கூட்டக் குறிப்புகள் அத்துடன் பாராளுமன்றத்தில் அடுத்து நடைபெறவிருக்கும் அமர்வுகளுக்காக முடிவு செய்யப்பட்டிருக்கும் அலுவல்கள் பற்றிய தகவல்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரித்து பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(22) அனைத்து கட்டளைகள், விதிகள், ஒழுங்குவிதிகள், உடன்படிக்கைகள் மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் போன்ற துணைநிலைச் சட்டவாக்கங்கள் (Subordinate Legislation) பாராளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்பட்ட பின்னர், அதுகுறித்து சனாதிபதியின் செயலாளர் அல்லது பிரதம அமைச்சர் மற்றும்/அல்லது உரிய அமைச்சுகளின் செயலாளர்களுக்கு எழுத்துமூலம் முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(23) பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படும்போது சபைக்கு ஆவணப்படுத்தப்படுகின்றதும் பல்வேறு அரசாங்க நிறுவனங்களினால் வெளியிடப்பெற்றதுமான ஆண்டறிக்கைகள், வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் கணக்கு அறிக்கைகள் மென் பிரதிகளாக பாராளுமன்ற இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

(24) 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்ட (Right to Information Act)த்தின் கீழ், சபை ஆவண அலுவலகத்தின் விடயப் பரப்பிற்கு உட்பட்ட பல்வேறு தகவல்களை பல்வேறு தரப்பினருக்கு

விடயத்திற்கு ஏற்றவாறு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2025ஆம் ஆண்டில் 43 தடவைகளில் அத்தகைய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(25) பல்வேறு சந்தர்ப்பங்களில் பொலிசாரின் புலனாய்வுகளுக்கு ஏற்புடையதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுச் செய்வதற்கான ஆணைக்குழு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம், குற்றச் செயல்களின் வரும்படிகள் விசாரணைப் பிரிவு மற்றும் இலங்கைப் பொலிஸாரின் சட்ட விரோத சொத்துகள் விசாரணைப் பிரிவினால் கோரப்பட்டிருந்த தகவல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(26) 2025ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் பேரில், அவர்களது சேவைக் காலத்தை உறுதிப்படுத்தி 50 சந்தர்ப்பங்களில் பல்வேறு நிறுவனங்கள் அல்லது சம்பந்தப்பட்டவர்களின் தகவலுக்காக சேவைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

(27) பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகள் பற்றிய தகவல்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு அவசியமான தகவல்கள் போன்ற பல்வேறு தகவல்கள் பொது மக்களின் கோரிக்கையின் பேரில் அவ்வப்போது வழங்கப்பட்டுள்ளன. சட்டவாக்கப் பணிகள் சம்பந்தப்பட்ட துல்லியமான மற்றும் சடுதியான தகவல்கள் மற்றும் சமூகமயப்படுத்தத் தேவையான தகவல்களை வழங்க தொடர்பாடல் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(28) பல சந்தர்ப்பங்களில் சட்டவாக்கப் பணிகளை முறையாக கொண்டு நடத்துவதற்கு பாராளுமன்ற பணியாட்டொகுதி அங்கத்தவர்களையும் இணைந்த பிரிவுகளின் பணியாட்டொகுதி அங்கத்தவர்களையும் அவசியமான முறையில் விழிப்புணர்வு செய்ய முனைப்பாக இடையீடு செய்யப்பட்டுள்ளது.

(29) பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுகின்ற எல்லா நேரங்களிலும் சபை ஆவண அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவர், பாராளுமன்றப் பணியாட்டொகுதிக்கென ஒதுக்கப்பட்டுள்ள கருமபீடத்தில் இருந்தவாறு கடமையாற்றி சபை நடவடிக்கைகளை அறிக்கையிட நடவடிக்கை எடுத்துள்ளார்.

(30) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் நேரடியாக உள்வாங்கப்படாவிடினும், சபை நடவடிக்கைகள் மற்றும் அதற்கு இடைநேர் விளைவாக நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக செயலாளர் நாயகத்தால் விடுக்கப்படுகின்ற பணிப்புரைகள் / வழிகாட்டல்களுக்கு அமைவாக அவசிமான பணிகளை விடயத்திற்கு ஏற்றவாறு

மேற்கொண்டு, சபை நடைவடிக்கைகளை தடையின்றியும் கிரமமாகவும் கொண்டுநடத்த இந்த அலுவலகம் உயரிய பங்களிப்பை வழங்கி உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## சட்டமூல அலுவலகம்

பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முதன்மைச் சட்டவாக்கச் செயற்பாடாகிய சட்டம் இயற்றும் செயன்முறையை, அரசியலமைப்பினதும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளினதும் ஏற்பாடுகளுக்கமைவாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்டமூல அலுவலகத்தின் பணியாகும்.

அதன்கீழ், சட்டமூல அலுவலகத்தினால் அரசாங்கத்தின் சட்டமூலங்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதலில் தொடங்கி, அவை நிறைவேற்றப்பட்டு அச்சட்டங்களுக்கு சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்டதைத் தொடர்ந்து அச்சிடப்படும் வரை நிறைவேற்றப்பட வேண்டிய சகல சட்டவாக்கப் படிநிலைகளுக்கு ஏற்பான அலுவல்கள் மும்மொழிகளிலும் நிறைவேற்றப்படுகின்றன.

அத்தோடு, புதிய நிலையியற் கட்டளை இலக்கம் 52(3) இற்கு அமைய, தனியார் உறுப்பினர் சட்டமூலங்கள் சட்டத்துறை தலைமையதிபதியிடம் ஆற்றுப்படுத்தப்பட்டு அவற்றின் யாப்பமைதியுடமை தொடர்பான அபிப்பிராயம் பெறப்பட்டதைத் தொடர்ந்து வர்த்தமானியில் அச்சிடப்படுதல் தொடக்கம் அச்சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அச்சிடப்படுதல் வரையான நடவடிக்கைகளும் மும்மொழிகளில் மேற்கொள்ளப்படுகிறன.

**அதற்கமைவாக, 2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

1. சட்டமூல அலுவலகத்திற்குக் கிடைத்த அரசாங்கச் சட்டமூலங்களுக்கான வர்த்தமானிகளின் எண்ணிக்க - 38
2. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கச் சட்டமூலங்களுக்கான வர்த்தமானிகளின் எண்ணிக்கை - 34
3. சட்டமூல அலுவலகத்தினால் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அரசாங்கச் சட்டமூலங்களின் எண்ணிக்கை - 34
4. விலக்கிக் கொள்ளப்பட்ட அரசாங்கச் சட்டமூலங்களின் எண்ணிக்கை - 00
5. பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட அரசாங்கச் சட்டமூலங்களின் எண்ணிக்கை - 26
6. கௌரவ சபாநாயகரினால் சான்றுரை எழுதப்பட்ட அரசாங்கச் சட்டங்களின் எண்ணிக்கை - 26
7. அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை - 26

மேற்குறித்த ஆண்டில்,

1. தனியார் உறுப்பினர் சட்டமூலங்களைச் சமர்ப்பித்தல் தொடர்பில் சட்டமூல அலுவலகத்திற்குக் கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை - 45
2. நிலையியற் கட்டளை இலக்கம் 52 (3) இற்கு அமைய, சட்டத்துறை தலைமை அதிபதியிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலங்களின் எண்ணிக்கை - 39
3. சட்டமூல அலுவலகத்தினால் அச்சிடுவதற்கு அரசாங்க அச்சகத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அச்சிடப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலங்களுக்கான வர்த்தமானிகளின் எண்ணிக்கை - 13
4. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலங்களுக்கான வர்த்தமானிகளின் எண்ணிக்கை - 12
5. அமைச்சரின் அறிக்கைகளைப் பெறுவதற்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலங்களின் எண்ணிக்கை- 11
6. விலக்கிக் கொள்ளப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலங்களின் எண்ணிக்கை - 01
7. பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலங்களின் எண்ணிக்கை
8. கௌரவ சபாநாயகரினால் சான்றுரை எழுதப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலங்களின் எண்ணிக்கை
9. சட்டவாக்க நிலையியற் குழு கூட்டப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை- 00

இதற்கு மேலதிகமாக, கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளும் சட்டமூல அலுவலகத்தால் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) அரசாங்க சட்டமூலங்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழு மற்றும் அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டங்களில் சட்டமூல அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் பங்குபற்றி தேவையான பங்களிப்பை வழங்குதல்;

(ஆ) சட்டங்கள், சட்டமூலங்கள் மற்றும் சட்டமூல அலுவலகம் பற்றிய தகவல்களை பாராளுமன்ற இணையத்தளத்தின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் மும்மொழிகளிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தேவையான வசதிகளை வழங்குதல்;

(இ) சட்டமூலங்களுக்குரியதாக சட்டவாக்கச் சேவைகள் தகவல் முறைமையை இற்றைப்படுத்தல்;

(ஈ) 2024 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சகல சட்டங்களையும் ஒன்று திரட்டி நூலொன்றாக தொகுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

(உ) தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், சட்டமூல அலுவலகம் சார்ந்ததாக வெளித் தரப்பினரால் கோரப்பட்ட தகவல்களை பாராளுமன்றத்தின் தகவல் அலுவலருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்;

(ஊ) கௌரவ அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளுக்கமைவாக சட்டமூலங்கள்/சட்டங்கள் தொடர்பாகவும் அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்குரியதாவும் தகவல்களை வழங்குதல்;

(எ) உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகள்/சட்ட மூலங்கள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மற்றும் சட்ட மூலங்களுக்கு சபாநாயகரின் சான்றுரை எழுதுவதற்காக கௌரவ சபாநாயகரினால் பாராளுமன்றத்தில் அறிவிப்பதற்காக அறிவித்தல் ஆவணங்களை தொகுத்து வழங்குதல்;

(ஏ) உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை ஒன்று திரட்டி, தொகுத்து, புத்தகமாக அச்சிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்; மற்றும்

(ஐ) கௌரவ சபாநாயகரின் சான்றுரையை பெற்றுக்கொள்வதற்காக அனுமதியளிக்கப்பட்ட பிரதியை முறையாக தொகுத்து வழங்குதல்

போன்றவை சட்டமூல அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## <u>அமைச்சுசார் ஆலோசனைக் குழு அலுவலகம்</u>

| எதிர்பார்த்த பெறுபேறு | அடைந்த பெறுபேறு |
|---|---|
| அமைச்சுக்களின் செயலாளர்களோடு பயனுள்ள ஒருங்கிணைப்பைப் பேணுதல் | நடாத்தப்பட்ட குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை 60.<br>***(இணைப்பு 1)***<br><br>நடாத்தப்பட்ட உப குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை 37.<br>***(இணைப்பு 1)*** |
| தேவையான ஆவணங்களை சரியான முறையில் வழங்குதல் | குழுக் கூட்டங்களுக்குத் தேவையான நிகழ்ச்சி நிரல் மற்றும் பிற ஆவணங்கள், குழுக் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகள் முதலியவற்றை சரியாகத் தயாரித்தல் முதலிய பணிகள் அடங்களாக பயனுறுதிமிக்கதாகவும் |

| | |
|---|---|
| | செயல்திறன்மிக்கதாகவும் 60 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.<br><br>*(**இணைப்பு** 1)*<br><br>உப குழு கூட்டங்களுக்குத் தேவையான நிகழ்ச்சி நிரல் மற்றும் பிற ஆவணங்கள், உப குழு கூட்டங்களின் குறிப்புகள் முதலியவற்றை சரியாக தொகுத்தல் முதலிய பணிகள் அடங்களாக பயனுறுதிமிக்கதாகவும் வினைத்திறனாகவும் 37 உப குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.<br><br>*(**இணைப்பு** 2)*<br><br>குழுவினால் வழங்கப்படும் விதப்புரைகளுக்கு அமைவாக 03 விசேட செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.<br><br>*(**இணைப்பு** 4)* |
| பிரேரணைகளுக்கான பதில் அறிக்கைகளை அமைச்சுகளிலிருந்து துரிதமாக பெற்றுக்கொள்ளல் | அறிக்கைகளைக் கோரி அமைச்சுகளுக்கு அனுப்பப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை - **385**<br>அமைச்சுக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளின் எண்ணிக்கை - **263**<br>***இணைப்பு** 3)* |
| காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்தில் அறிக்கைகளைச் சபை மேசையில் சமர்ப்பித்தல் | 2025 ஆம் ஆண்டில் அமைச்சுசார் ஆலோசனைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு ஆராயப்பட்ட சட்டமூலங்கள், ஒழுங்குவிதிகள், கட்டளைகள், சட்டங்கள் மற்றும் அறிவித்தல்களின் எண்ணிக்கை – 13 (***இணைப்பு 5***)<br><br>2025 ஆம் ஆண்டில் அமைச்சுசார் ஆலோசனைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு ஆராயப்பட்ட ஆண்டறிக்கைகள் மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளின் எண்ணிக்கை – 66 (***இணைப்பு 6***)<br><br>மேற்படி அமைச்சுசார் ஆலோசனைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட சட்டமூலங்கள், ஒழுங்குவிதிகள், கட்டளைகள், சட்டங்கள், அறிவித்தல்கள், ஆண்டறிக்கைகள் மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய அனைத்து அறிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு |

| | |
|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>பத்தாவது பாராளுமன்றத்தின் 2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக்குழு கூட்டங்களில் கூட்ட குறிப்புகள் நிறைவேற்றப்பட்ட ஒழுங்கின் படி தொகுக்கப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக்குழுவின் முதலாவது அறிக்கை 2026.01.23 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |

**2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குழுக்கள்** ***(இணைப்பு 1)***

| தொ.இல | **நடாத்தப்பட்ட குழு** | **நடைபெற்ற திகதி** | **நடாத்தப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அலமச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/02/20<br>• 2025/06/17 | 2 |
| 2 | நிதி, கொள்கை வகுத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/03/19 | 1 |
| 3 | டிஜிட்டல் பொருளாதாரஅலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழு | • 2025/02/20 | 1 |
| 4 | கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/03/07<br>• 2025/06/03<br>• 2025/08/06<br>• 2025/09/25<br>• 2025/11/19 | 5 |
| 5 | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/02/28<br>• 2025/10/23 | 2 |
| 6 | வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/03/12<br>• 2025/06/18 | 2 |
| 7 | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/02/07<br>• 2025/09/09 | 2 |
| 8 | கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி | • 2025/03/04<br>• 2025/06/19 | 3 |

| | | | |
|---|---|---|---|
| | அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/11/25 | |
| 9 | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/01/24<br>• 2025/02/28<br>• 2025/07/22<br>• 2025/08/19<br>• 2025/10/09 | 5 |
| 10 | பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/03/05<br>• 2025/09/12 | 2 |
| 11 | சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | • 2025/03/04<br>• 2025/10/10 | 2 |
| வைபவங்கள் | i. பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் அனைத்து விதமான வைபவங்களையும் தேசிய மற்றும் சமய | 100% | |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்தல், நடாத்துதல் மற்றும் கௌரவ சபாநாயகர் சார்பில் இராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்பிலான விடயங்களை பிரதிநிதித்துவம் செய்தல்.<br>ii. பிரமுகர்கள் மற்றும் ஏனைய வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு வருகை தரும் போது அவர்களை வரவேற்றல் மற்றும் வசதியளித்தல்.<br>iii. அரசாங்க அனுசரணையுடன் கூடிய இறுதி அஞ்சலி செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்/ உருவப்பட திரைநீக்கம் செய்தல். | 100%<br>100% | |
| விருந்தினர்கள் தொடர்பன நடவடிகைகளின் முகாமைத்துவமும் | தொடர்புடைய தரப்பினருக்கு ஒத்துழைத்தலும் பொதுமக்கள் தொடர்பன நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தலும் களரி நிர்வாகமும். | 100% | பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக விருந்தினர்கள் வரையறுக்கப்பட்ட சில தொகுதிகளுக்கு மட்டுப்படுத்தப் பட்டனர். |
| பாதுகாப்பு | i. சட்டவாக்கச் செயன்முறைக்கு ஒத்துழைத்தல் மற்றும் சபையின் நடவடிக்கைகளை நிறைவேற்று வதற்காக பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியிலும் வெளி வளாகத்திலும் தீவிர பாதுகாப்பைப் பேணுதல். பாதுகாப்பு தொடர்பான விடயங்களை கௌரவ சபாநாயகருக்கு முன் வைத்தல்.<br>ii. இற்றைப்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் பகுப்பாய்வுகளுக்கு முகங் கொடுப்பதற்காக பாதுகாப்பு முறைமைகளை / ஏற்பாடுகளை தொடர்ச்சியாக | 100%<br>95%<br>100% | சில மேம்படுத்தல்களுக்கு அதிகளவு செலவு ஏற்படும் என்பதாலும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மட்டுப்படுத்தப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | மேம்படுத்துதல் மற்றும் இற்றைப்படுத்துதல்.<br>iii. வருடத்திற்கென திட்டமிடப்பட்டுள்ள வகையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள். வழங்குநர்கள். பாராளுமன்ற உறுப்பினர்களின் சாரதிகள் உட்பட பாராளுமன்ற / இணைந்த / எனைய பதவியணியினர் தொடர்பிலான பாதுகாப்பு தடைநீக்கச் செயற்பாடுகள்.<br>iv. வெடிபொருட்கள் உட்பட தீயணைப்பு பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்.<br>v. திறவுகோல் நிர்வாகம்.<br>vi. காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி ஊடுகதிர் (x கதிர்) பரிசோதனை மேற்கொள்ளல். | 100%<br>100%<br>100% | |
| சபைக்கூடம் | 'செங்கோலின்' பொறுப்பு உட்பட சபைக்கூடத்திற்கான உதவிச் சேவைகளை வழங்குதல், சபையில் ஆசனங்களை ஒதுக்குதல், உறுப்பினர்களின் மூப்புரிமைப் பட்டியலைப் பேணுதல், வருகையைப் பதிதல், ஒழுக்கத்தைப் பேணல் மற்றும் கௌரவ சபாநாயகரின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல். | 100% | |

| | | | |
|---|---|---|---|
| இட வசதிகளை ஏற்பாடு செய்தல் | பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் சந்திப்பு அறைகள், கட்சி அலுவலகங்கள், குழு அறைகள், அமைச்சர்களின் அறைகள் மற்றும் அலுவலக இடவசதிகள் மற்றும் உரிய ஏனைய வசதிகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாட் டொகுதியினருக்காக வருடத்திற் குரியதான கோரிக்கைகளுக்கு அமைவாக ஒதுக்குதல். தளபாடங்கள் மற்றும் துணைப் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல். | 100% | |
| அனுமதிப் பத்திரங்கள் | உறுப்பினர்கள், பணியாட்டொகுதியினரின் அடையாள அட்டைகள், உத்தியோகத்தர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள், களரி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் உள்ளிட்ட கட்டிடத்திற்கும் பாராளுமன்ற கட்டிடத் தொகுதிக்குமான சகல பிரவேச அனுமதிப் பத்திரங்களையும் வழங்குதல். | 100% | |
| சேவைகள் / நலனோம்பு கை | I. தொலைபேசி சேவைகள், வரவேற்பு சேவைகளைப் பேணிவருதல்.<br>II. தளபாடங்களை மினுக்குதல்.<br>III. கடிதங்கள். செய்தித்தாள்களை வகைப்படுத்துதல் மற்றும் விநியோகித்தல்.<br>IV. பணியாட்டொகுதியினரின் சீருடைகளை சுத்தப்படுத்துதல்.<br>V. உறுப்பினர்ளுக்கு ஓய்வு அறை வசதிகளை வழங்குதல்.<br>VI. உறுப்பினர்களுக்கான/ பணியாட்டொகுதியினருக்கான லொக்கர்/ அலுமாரி வசதிகளை வழங்குதல். | 100%<br>100%<br>100%<br>100%<br>100%<br>100% | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| தகவல்கள் மற்றும் வெளியீடுகள் | I. திணைக்களத்திற்குரியதான தரவுகளை பாராளுமன்ற இணையதளத்தில் இற்றைப்படுத்துதல், உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பணியாட்டொகுதியினரின் புகைப்படங்களை பாராளுமன்ற இணையதளத்திலும் வலைத்தளத்திலும் பதிவேற்றம் செய்தல்.<br>II. படைக்கலச் சேவிதர் அலுவலகத்தின் வெளியீடுகள், அதன் வரலாறு மற்றும் செயற்பணி, நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துதல். | 100%<br>100% | |
| தொல்பொருளியல்/ வரலாற்று ரீதியான நோக்கங்களை பிரதிபலிக்கின்ற பொருட்களின் விற்பனை | பாராளுமன்ற நினைவுப் பொருட்கள் விற்பனை நிலையம் மற்றும் சித்திரங்கள், சுவர் ஓவியங்கள், மரப் பொருட்கள், வெள்ளி மற்றும் பொன்முலாம்கள் உள்ளிட்ட கண்காட்சி நிலையத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல மற்றும் ஒழுங்குபடுத்துதல். | 60% | நிலவும் பொருளாதார நிலைமையின் கீழ் விற்பனைக்கான இலக்காகக் கொண்ட பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமங்கள் |
| திணைக்களம்சார் விடயங்கள் | i. பணியாட்டொகுதி கூட்டங்களுக்கான வசதிகளை வழங்குதல், பாதுகாப்பு தொடர்பான கூட்டங்களை தேவைக்கேற்றவாறு நடத்துதல்.<br>ii. பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் கட்டட நிர்மாணங்களை அங்கீகரிப்பது | 100%<br>100% | |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான கடமைகள்.<br>ii. பணியாட்டொகுதியினர் தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் திணைக்களப் பணிகளுக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மொத்த பணியாட்டொகுதியின் எண்ணிக்கை 140. | 100% | |

## நிர்வாகத் திணைக்களம்

நிர்வாகத் திணைக்களமானது பின்வரும் அலுவலகங்களைக் கொண்டமைந்துள்ளது.

- தாபன அலுவலகம்
- உறுப்பினர் சேவைகள் அலுவலகம்
- மனிதவன அபிவிருத்திப் பிரிவு
- போக்குவரத்து அலுவலகம்

மேற்படி அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய சேவைகள் பின்வருமாறாகும்.

**<u>தாபன அலுவலகம்</u>**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியினரை வினைத்திறன் மற்றும் பயனுறுதிமிக்கவர்களாக்கும் செயற்பாட்டின் நிமித்தம் மனிதவள செயற்பாடுகளை மேற்பார்வை ரீதியாக கட்டுப்படுத்துதல் தாபன அலுவலகத்தின் பிரதான பொறுப்பாகும். அதற்காக ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, ஓய்வுபெறச் செய்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்ற தாபன ரீதியான பணிகளைப் போன்றே சகல பணியாட்டொகுதி அங்கத்தவர்களுக்குமான பிரத்தியேக ஆவணக்கோப்புகளையும் பேணி வருகின்றது.

**2025 ஆம் ஆண்டில் தாபனப் பிரிவின் முன்னேற்றமானது செயற்பாட்டுத் திட்டத்திற்கமைவாக பின்வருமாறாகும்.**

| செயற்பாடு | செயலாற்றுகை (%) |
|---|---|
| ஆட்சேர்ப்பு செயன்முறை மூலம் மிகவும் பொருத்தமான நபர்களை ஆட்சேர்த்தல். | 85% |
| வருடாந்த சம்பள ஏற்றங்களை வழங்குதல்/ பதவியுயர்வு நடைமுறைகளைப் பேணுதல் | 100% |
| ஓய்வூதிய கோப்புகளைத் தயார் செய்தல் | 100% |
| பாராளுமன்ற பணியாளர் ஆலோசனைக் குழுக் கூட்டங்களை நடாத்துதல். | 100% |
| மெத்செவன தங்குமிட வசதிகளை வழங்குதல். | 100% |
| இ.போ.ச. பேருந்து அனுமதிச் சீட்டுக்கள் | 100% |

| | |
|---|---|
| காப்புறுதி வசதிகளை வழங்குதல் | 100% |
| பணியாளர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குதலும் பராமரித்தலும் | 100% |

**உறுப்பினர் சேவைகள் அலுவலகம்**

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகளை வழங்குவது இப்பிரிவின் முதன்மை பொறுப்பாக அமைவதோடு அதற்காக பாராளுமன்றத்தின் ஏனைய திணைக்களங்கள்/பிரிவுகள் மற்றும் வெளி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டவாறு குறிப்பிட்ட பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டில் உறுப்பினர் சேவைகள் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் முன்னேற்றம் பின்வருமாறு.

| நோக்கம் | உத்தேச செயற்பாடு | முன்னேற்றம் (சதவிகிதமாக) | எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைய முடியாமற் போனமைக்கான காரணம் |
|---|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் | 1. சபைக்குழு கூட்டங்களை நடாத்துதல் | 100% | |
| | 2. மாதிவெல வீடமைப்புத் தொகுதியில் வீடுகளை ஒதுக்குவது தொடர்பான நடவடிக்கைகள் | 100% | |
| | 3. நுவரெலியா சேனாதிபதி இல்லத்தில் அறைகள் ஒதுக்கிட்டை ஒருங்கிணைத்தல் | 100% | |
| | 4. மாதிவெல வீடமைப்புத் தொகுதி மற்றும் நுவரெலியா சேனாதிபதி இல்லத்தின் புனரமைப்பு/ பராமரிப்பு பணிகளை இணைப்புப் பொறியிலாளர் திணைக்களத்துடன் ஒருங்கிணைத்தல். | 100% | |

| | | | |
|---|---|---|---|
| | 5. மாதிவெல வீட்டு அலகுகள், நுவரெலியா சேனாதிபதி இல்லம் மற்றும் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் ஆகியவற்றின் மின்சாரம், நீர், தொலைபேசிக் கட்டணப் பட்டியல்களைத் தீர்த்தல் மற்றும் ஆடைகளைச் சலவை செய்தல் | 100% | |
| | 6. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டுக் காப்புறுதித் திட்டம் தொடர்பிலான நடவடிக்கைகளை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளல் | 100% | |
| | 7. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலக உபகரணங்களை வழங்குவது தொடர்பிலான நடவடிக்கைகளை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுடன் ஒருங்கிணைத்தல். | 70% | அலுவலக உபகரணங்களைக் கோரிய மற்றும் அதற்கான தகைமைபெற்ற கௌரவ உறுப்பினர்களுக்கு மாத்திரம் அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. |
| | 8. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மொழிப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்த ஏற்பாடு செய்தல். | 100% | |

| | | | |
|---|---|---|---|
| | 9. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்தம் காகிதாதிகளை வழங்குதல். | 65% | காகிதாதிப் பொதிகளுக்கு விண்ணப்பித்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் காகிதாதிப் பெதிகள் வழங்கப்பட்டுள்ளது. |

**<u>போக்குவரத்து அலுவலகம்</u>**

2025ஆம் ஆண்டில் போக்குவரத்து அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் வழங்கப்பட்ட சேவைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| | **நடவடிக்கைகள்** | **அடைந்த பெறுபேறு சதவிகிதமாக (%)** |
|---|---|---|
| 01 | பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியினர் மற்றும் இணை நிறுவனங்களின் பணியாட்டொகுதியினர் அலுவலகத்திற்கு வருகைதரல் மற்றும் மீண்டும் வீடுகளுக்கு திரும்பிச் செல்வதற்கான வசதிகளை வழங்கும் பொருட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபையுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு 09 பேருந்துகளை தொலைதூர போக்குவரத்தில் ஈடுபடுத்தியமை மற்றும் பாராளுமன்ற பேருந்துகள் மூலமாக பல்வேறு நகரங்களூடாக தொடர்ச்சியான குறுகியதூர பேருந்துச் சேவையை மேற்கொண்டமை. | 100 |
| 02 | பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியினர் மற்றும் இணை நிறுவனங்களின் பணியாட்டொகுதியினரின் கடமைத் தேவைப்படுகளின் நிமித்தம் அலுவலக நேரங்களிலும் அலுவலக நேரம் முடிவடைந்த பிறகும் பல்வேறு நகரங்களுக்கும் அத்தியாவசிய தேவையின் நிமித்தம் உத்தியோகத்தர்களின் வீடுகளுக்கும் போக்குவரத்து வசதிகளை வழங்கியமை மற்றும் வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் கடமைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் பணியில் ஈடுபடும் பணியாட்டொகுதியினருக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கியமை. | 100 |
| 03 | பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியினர் மற்றும் இணை நிறுவனங்களின் | 100 |

| | | |
|---|---|---|
| | பணியாட்டொகுதியினருக்கு பொல்தூவ தொடக்கம் பாராளுமன்றம் வரையிலும், ஜயந்திபுர பிரதான நுழைவாயிலில் இருந்து பாராளுமன்றம் வரையிலும் குறுகியதூர போக்குவரத்துச் சேவையினூடாக வசதிகளை வழங்கியமை மற்றும் பாராளுமன்றத்திற்கு வருகை தரும் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் பாராளுமன்றத்தை பார்வையிட வருகை தரும் பொதுமக்களுக்கும் ஜயந்திபுர பிரதான நுழைவிலிருந்து பாராளுமன்றம் வரையில் போக்குவரத்து வசதிகளை வழங்கியமை. | |
| 04 | கௌரவ சபாநாயகர், கௌரவ பிரதிச் சபாநாயகர், கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தாகும் அவர்களது பணியாட்டொகுதியினருக்கும் வாகனங்களை வழங்குதல். | 100 |
| 05 | பாராளுமன்றச் செயலாளர் நாயகம் உள்ளிட்ட ஏனைய உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தாகும் உத்தியோகத்தர்களுக்கு வாகனங்களை ஒதுக்கீடு செய்தலும் குழுப் போக்குவரத்து வசதிகளை தொடர்ச்சியாக பேணுதலும். | 100 |
| 06 | பாராளுமன்ற வாகனத் தொகுதிக்கு உரித்தான அனைத்து வாகனங்களுக்கும் வருமான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் காப்புறுதிகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் விபத்துக்களின் போது உரிய நட்டஈட்டைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | 100 |
| 07 | பாராளுமன்ற வாகனத் தொகுதிக்கு உரித்தான அனைத்து வாகனங்களினதும் பராமரிப்புச் சேவைகளை மேற்கொள்ளல். | 100 |
| 08 | பாராளுமன்ற வாகனத் தொகுதிக்கு உரித்தான அனைத்து வாகனங்களிலும் பாராளுமன்றத்திற்குள் மேற்கொள்ளக்கூடிய திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை பாராளுமன்றத்தின் பராமரிப்பு அலகினூடாக மேற்கொள்ளல். | 100 |
| 09 | சாரதிகளின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் இணைந்த படிகள் செலுத்துவதற்குரியதான ஆவணங்களுக்கு அனுமதி வழங்கி நிதி மற்றும் கணக்குகள் பணியகத்திற்கு அனுப்புதல். | 100 |
| 10 | பாராளுமன்ற வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குதல் மற்றும் எரிபொருள் கொள்வனவுக் கட்டளைகளைப் பிறப்பித்தலும் குறிப்பிட்ட எரிபொருள் கட்டணப் பட்டியல்களைத் தீர்த்தலும். | 100 |
| 11 | போக்குவரத்துத் தகவல் முகாமைத்துவ முறைமையை இற்றைப்படுத்தி பராமரித்துச் செல்லல். | 100 |
| 12 | வாகனங்களின் துப்பரவு விடயங்களை முறையாக பேணுவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்து அதனை நடைமுறைப்படுத்துதல். | 100 |
| 13 | பாராளுமன்ற போக்குவரத்து முறைமையை முறையாக பேணிச் செல்வதற்குரியதான சுற்றுநிருபங்களையும் | 100 |

| | | |
|---|---|---|
| | ஆவணங்களையும் முறையாக பேணிச் செல்லல். | |
| 14 | போக்குவரத்து பிரிவுக்குரிய கடித விநியோகப் பிரிவினூடாக அவசர மற்றும் இரகசியமான ஆவணங்களை விநியோகித்தல். | 100 |

## ஹன்சாட் திணைக்களம்

2025ஆம் ஆண்டில் ஹன்சாட் திணைக்களம் நிறைவேற்றிய பல்வேறு கடமைப் பொறுப்புக்கள் பின்வருமாறு:

**பாராளுமன்ற அமர்வுகள்**

01. 111 பாராளுமன்ற அமர்வு நாட்களை அறிக்கையிடலுக்கு உட்படுத்தியமை
02. மேற்படி அமர்வுகளை சொற்படியாக அறிக்கையிட்டு, பதிப்பிற்குட்படுத்தியதன் பின்னர் உரிய 111 ஹன்சாட் அறிக்கைகளையும் அச்சிட்டமை.
03. மேற்படி 111 ஹன்சாட் அறிக்கைகளையும் பாராளுமன்ற இணையத்தில் பிரசுரித்தமை.

**குழுக் கூட்டங்கள்**

04. ஆண்டு முழுவதும் நடத்தப்பட்ட 125 பல்வேறு குழுக் கூட்டங்களின் நடவடிக்கைகளை அறிக்கையிடலுக்கு உட்படுத்தியமை.

    நடத்தப்பட்ட குழுக்கூட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு | 29 |
| அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு | 15 |
| உயர் பதவிகள் பற்றிய குழு | 14 |
| அரசாங்க நிதி பற்றிய குழு | 53 |
| ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழு | 14 |
| | 125 |

05. 2024ஆம் ஆண்டுக்குரியதாக நிறைவு செய்யப்படாதிருந்த 101 குழு அறிக்கைகள், 2025ஆம் ஆண்டுக்குரியதாக 106 அறிக்கைகள் உட்பட 207 அறிக்கைகளை சொற்படியாக அறிக்கையிட்டு, பதிப்பிற்குட்படுத்தியதன் பின்னர் உரிய குழு அலுவலகங்களுக்கு அனுப்பியமை.
06. இந்த குழு நடவடிக்களுக்கு மேலதிகமாக 02 ஒழுக்காற்று விசாரணைக் குழுக்களின் நடவடிக்கைகளை அறிக்கையிட்டமை.
07. அரசியலமைப்புப் பேரவையின் 17 அமர்வுக் கூட்டங்களை அறிக்கையிடலுக்கு உட்படுத்தி, சொற்படியாக அறிக்கையிட்டமை.

08. தேசபந்து தென்னகோன் அவர்களை பொலிசுப் பரிசோதகர் தலைமை பதவியிலிருந்து நீக்குதல் தொடர்பாக நடைபெற்ற விசேட விசாரணைக் குழுவின் 17 அமர்வுகளை அறிக்கையிடலுக்கு உட்படுத்தி, சொற்படியாக அறிக்கையிட்டமை.

## ஒப்பு நோக்குதல்

09. தொகுதி 309 முதல் 315 வரையான 62 ஹன்சாட் அறிக்கைகள் ஒப்பு நோக்கப்பட்டமை.
10. தொகுதி 310 முதல் 312 வரையான திருத்திய 27 ஹன்சாட் அறிக்கைகள் இறுதி அச்சுப் பதிப்புக்காக அனுப்பி வைக்கப்பட்டமை.
11. தொகுதி 310 முதல் 312 வரையான திருத்திய பிரதிகள் பாராளுமன்ற இணையத்தில் பிரசுரிக்கப்பட்டமை.

## அனுதாபப் பிரேரணைகள்

12. 05 நாட்கள் நடைபெற்ற அனுதாபப் பிரேரணை உரைகள் அடங்கிய 21 விசேட ஹன்சாட் அறிக்கைகளைத் தயாரித்தல்.

## சூசிகை தயாரித்தல்

13. 06 ஹன்சாட் தொகுதிகளுக்குரிய சூசிகைகளைத் தயாரித்தல் (தொகுதி 314 – 318)
14. பாராளுமன்றத்தில் அன்றாடம் இடம்பெறுகின்ற நடவடிக்கைளுக்கான காலம் பற்றிய சூசிகையொன்றையும், வகைப்படுத்தப்பட்ட விடயங்களைக் கொண்ட பட்டியலொன்றையும் பிற்காலத் தேவையின் பொருட்டு பராமரித்தல்.
15. பாராளுமன்றத்தில் இடம்பெறுகின்ற நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல், வகைப்படுத்தல் மற்றும் அவசியமான சந்தர்ப்பங்களில் உரிய பிரிவுகளுக்கு வழங்குதல்.
16. பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் பிரகாரம், யாதேனும் கூட்டத் தொடர் ஒன்றில் இடம்பெற்ற சகல உரைகள் பற்றியதான சூசிகையை வழங்குதல்.
17. தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஹன்சாட் அறிக்கைகள் தொடர்பில் கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய தகவல்களை வழங்குதல்.

## ஒலிப்பதிவு செய்தல்

18. பாராளுமன்ற அமர்வுகளுக்குரியதான உரைகளை ஒலிப்பதிவு செய்தல்.
19. குழுக் கூட்டங்களை ஒலிப்பதிவு செய்தல்.
20. இவற்றுக்கு மேலதிகமாக பாராளுமன்ற விவாதங்கள் தொடர்பிலான இறுவட்டுக்களில் அக்கிராசனத்தின் கட்டளையின் பிரகாரம் அகற்றப்படுகின்ற பகுதிகளை வெட்டி அகற்றியதன் பின்னர் அவற்றை வெளியிடுவதற்கான அனுமதியை வழங்குதல்.

21. நேர்முக தேர்வுக் குழுக்கள், பெறுகைச் சபைகள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் வேறு அவசியமான கடமைளுக்கு சேவைகளை வழங்குதல்.

சபாநாயகர், செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஆகியோருக்கு அவசியமான சந்தர்ப்பங்களில் ஹன்சாட் அறிக்கையாளர்களின் சேவையை பெற்றுக்கொடுத்தல்.

**இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்**

| செயற்பாட்டு களம் | உத்தியோகபூர்வ செயற்பாடு | அடையப் பெற்ற பெறுபேறு | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாமைக்கான காரணங்கள் |
|---|---|---|---|
| **பாராளுமன்ற கட்டடத் தொகுதி** | | | |
| **நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் திருத்தப் பணிகள்** | i. பிரதான கட்டிடத்தின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள், பொதுவான பராமரிப்பு பணிகள் மற்றும் புதிய நிர்மாணங்கள் | 60% | பணியாளர்களை ஈடுபடுத்துவதில் சிக்கல் நிலவியது |
| | ii. பின்னியர பாதுகாப்புக் கட்டிட நிர்மாணம் மற்றும் நுழைவுப் பாதை அபிவிருத்தி | 90% | கௌரவ சபாநாயகரின் ஆலோசனையின் பிரகாரம் பாதையை அபிவிருத்தி செய்வதற்கான அனுமதி 2025 திசெம்பர் மாதம் கிடைத்தது. |
| | iii. ஜயந்திபுர பாதுகாப்புக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தல் | 0% | ஒதுக்கீட்டுக்கான அனுமதி கிடைக்கவில்லை |
| | iv. கௌரவ உறுப்பினர்களின் ஆடைகள் அறைக்கு மாபிள் பதித்தல் | 0% | பொருத்தமான ஆலோசனைச் சேவை நிறுவனமொன்றை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டியுள்ளது |
| | v. நடு வாசலைச் சுற்றி அலுமினியம் வலையொன்றை பொருத்ததல் | 100% | |
| | vi. கட்டிடத்தின் உட்புற மற்றும் வெளிப்புறங்களுக்கு | 80% | பணியாளர்களை ஈடுபடுத்துவதில் சிக்கல் நிலவியது |

| | | | |
|---|---|---|---|
| | வர்ணம் பூசுதல், பராமரிப்பு, பொதுவான திருத்தப் பணிகள் | | |
| | vii. பாராளுமன்ற சுகாதார வசதிகளை நவீனமயப்படுத்துதல் | 10% | பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது |
| | viii. அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் விசேட திருத்தப் பணிகள், நிர்மாணிப்புகள் | 60% | பணியாளர்களை ஈடுபடுத்துவதில் சிக்கல் நிலவியது |
| | ix. செப்புக் கதவு, வெள்ளிக் கதவு, சிங்க நுழைவாயில் மற்றும் மர வேலைப்பாடு, உட்கூரை (சிவிலிம்) ஆகியவற்றின் திருத்தப் பணிகளை மேற்கொள்ளல் | 0% | ஒதுக்கீட்டுக்கான அனுமதி கிடைக்கவில்லை |
| | x. சபைக் கூடத்தின் கீழ்தரை விரிப்பை (காபர்ட்) மீண்டும் விரித்தல் | 0% | எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது |
| | xi. அரச மற்றும் பொதுமக்கள் வரவேற்பு கருமபீடங்களை நவீனமயப்படுத்துதல் | 0% | எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது |
| **கௌரவ சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம்** | | | |
| **திருத்தப் பணிகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்** | i. களஞ்சிய அறையின் கூரையை அமைத்தல் | 0% | நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் வானிலை நிலவரங்கள் காரணமாக |
| | ii . கட்டடத்தின் வெளிப்புற, உட்புற வர்ணம் பூசுதல் மற்றும் பொதுவான பராமரிப்பு வேலைகள். | 50% | பணியாளர்களை ஈடுபடுத்துவதில் சிக்கல் நிலவியது |
| | iii. அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகள், விசேட திருத்தப் பணிகள் மற்றும் | 25% | பணியாளர்களை ஈடுபடுத்துவதில் சிக்கல் நிலவியது |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிப்புகள் | | |
| **மாதிவெல உறுப்பினர் வீட்டுத் தொகுதி** | | | |
| **திருத்தப் பணிகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்** | i. உள்ள வீதிக் கட்டமைபை காபர்ட் இட்டு செப்பனிடுதல் | 0% | ஒதுக்கீட்டுக்கான அனுமதி கிடைக்கவில்லை |
| | ii. அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகள், விசேட திருத்தப் பணிகள் மற்றும் நிர்மாணிப்புகள் | 85% | பணியாளர்களை ஈடுபடுத்துவதில் சிக்கல் நிலவியது |
| **ஜயவடனகம வீட்டுத் தொகுதி** | | | |
| **திருத்தப் பணிகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்** | i. அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகள், விசேட திருத்தப் பணிகள் மற்றும் நிர்மாணிப்புகள் | 100% | |
| **நுவரெலியா சேனாதிபதி இல்லம்** | | | |
| **நவீனமயப்படுத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்** | i. பழைய கட்டடத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய நிர்மாணிப்புகளை மேற்கொள்ளல் | 0% | ஒதுக்கீட்டுக்கான அனுமதி கிடைக்கவில்லை |
| | ii. அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகள், விசேட திருத்தப் பணிகள் மற்றும் நிர்மாணிப்புகள் | 40% | 2026இல் நவீனமயப்படுத்தப்பட உள்ளது |
| **மெத்செவன விடுமுறை விடுதி** | | | |
| **திருத்தப் பணிகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்** | i. அலுமினியக் கதவுகள் பொருத்துதல் | 100% | |
| | ii. யன்னல்களுக்கு இரும்புச் சட்டங்களைப் (கிரில்) | 0% | ஒதுக்கீட்டுக்கான அனுமதி கிடைக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்துதல் | | |
| | iii. அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகள், விசேட திருத்தப் பணிகள் மற்றும் நிர்மாணிப்புகள் | 60% | பணியாளர்களை ஈடுபடுத்துவதில் சிக்கல் நிலவியது |
| **பொலிஸ் மகளிர் மற்றும் ஆண்கள் தனிப் படையினர் விடுதி** | | | |
| **திருத்தப் பணிகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்** | i. மகளிர் தனிப் படையினர் விடுதியின் துப்பரவேற்பாட்டு வசதிகளை நவீனமயப்படுத்தல் | 100% | |
| | ii. பொலிஸ் சமையலறையை நவீனமயப்படுத்தல் | 100% | |
| | iii. மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்திற்கு கூரை அமைத்தல் | 100% | |
| | iv. அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகள், விசேட திருத்தப் பணிகள் மற்றும் நிர்மாணிப்புகள் | 60% | ஒதுக்கீட்டுக்கான அனுமதி கிடைக்கவில்லை |

## நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம்

பணிப்பாளரின் (நிதி) கீழ் மேற்பார்வை செய்யப்படுகின்ற மூன்று பணியகங்களை நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம் கொண்டுள்ளது.

1. நிதி மற்றும் கணக்குகள் பணியகம்
2. வழங்கல்கள் மற்றும் சேவைகள் பணியகம்
3. உணவு வழங்கல் மற்றும் கணக்கீட்டுப் பணியகம்

அரச நிதி தொடர்பில் செயலாற்றுவதற்கு பிரதம கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள தத்துவங்களில் பெரும்பாலானவை நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறையாகப் பேணிவருவதற்காக பணிப்பாளர் (நிதி)இற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன், திணைக்களத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற சில பிரதான நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

i. வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தல், செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானத்தை திரட்டுதல், வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, கணக்கீடு மற்றும் இறுதிக் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல்.

ii. பாராளுமன்றத்திற்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் பெறுகை நடவடிக்கைகளை நிருவகித்தல்.

iii. பாராளுமன்ற உறுப்பினர்கள். ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், பணியாட்டொகுதியினர், ஓய்வு பெற்ற பணியாட்டொகுதியினர், அமய மற்றும் உதவிப் பணியாளர்களுக்குச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.

iv. வழங்குநர்களுக்கும் சேவை வழங்கும் நிறுவனங்களுக்கும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.

## நிதி மற்றும் கணக்குகள் பணியகம்

நிதி மற்றும் கணக்குகள் பணியகத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது.

| | விடயம் | உத்தேச செயற்பாடு | 2025 ஆண்டிறுதியில் முன்னேற்றம் (%) | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாமைக்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| 1 | கொடுப்பனவுகள் | i. பணியாட்டொகுதியினரின் சம்பளம் மற்றும் உறுப்பினர்களின் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் | 94 | சில உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரித்தான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளாமை மற்றும் பணியாட்டொகுதி வெற்றிடங்களுக்குப் புதிதாக வந்தவர்களின் எண்ணிக்கை எதிர்பார்க்கப்பட்ட அளவை விடக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குறைவாக இருந்தமை. |
| | | ii. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல் | 100 | |
| | | iii. ஏனைய மீண்டெழும் செலவினங்கள் | 83 | 10 ஆவது பாராளுமன்றத்தில் எரிபொருள் மற்றும் ஏனைய செலவீனங்களைச் சிக்கனமான முறையில் பயன்படுத்துதல். |
| | | iv. மூலதன செலவினங்கள் | 17 | நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் CECB நிறுவனத்தின் ஆலோசனைச் சேவைகளின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த திட்டங்களை, 10 ஆவது பாராளுமன்றம் அமைக்கப்பட்டதன் பின்னர் இலங்கை இராணுவத்தின் மனிதவளப் பங்களிப்பைப் பெற்று பாராளுமன்றத்தின் வழங்கல்கள் மற்றும் சேவைகள் பணியகத்தின் ஊடாக கொள்முதல் நடவடிக்கைகளை புதிதாக ஆரம்பித்து நடைமுறைப்படுத்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வேண்டியிருந்தமையால் 2025 ஆம் ஆண்டிற்கான செலவீனங்களின் முன்னேற்றம் குறைவாகக் காணப்பட்டது. |
| 2 | பாதீடு | i. வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை சமர்ப்பித்தல் | 100 | |
| | | ii. பாதீட்டுக் கட்டுப்பாடு | 75 | மேற்படி 1(iii) மற்றும் 1(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்டத்தினுள் முன்னேற்றமானது 75%ஆக காணப்பட்டது. |
| 3 | கடன் | i. கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் | 100 | |
| | | ii. கடன் மீள் அறவீடு | 100 | |
| | | iii. முற்பண ‘பீ’ கணக்கைத் தயாரித்தல் மற்றும் கடன் நிலுவைகளை இற்றைப்படுத்துதல் | 100 | |
| 4 | அறிக்கைகள் | i. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் | 100 | |
| | | ii. வங்கி இணக்க அறிக்கையைத் தயாரித்தல் | 100 | |
| | | iii. முற்பண நிதிப்பாய்ச்சல் கூற்றைத் தயாரித்தல் | 100 | |
| | | iv. வருடாந்த நிதிப்பாய்ச்சல் கணக்கைத் தயாரித்தல் | 100 | |
| 5 | வருமானத் திரட்டல் | பட்டியல் செயன்முறையைக் கண்காணித்தல் | 100 | |

## <u>வழங்கல்கள் மற்றும் சேவைகள் பணியகம்</u>

பாராளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பாராளுமன்றத்தில் தாபிக்கப்பட்டுள்ள 09 திணைக்களங்கள் மற்றும் அத்திணைக்களங்களின் கீழ் வரும் அலுவலகங்கள் மற்றும் பணியகங்களினால் வழங்கப்படும் சேவைகளைத் தொடர்ந்து பேணிச்செல்வதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை

வழங்குவதானது பிரதானமாக வழங்கல்கள் மற்றும் சேவைகள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாகும்.

அதற்கமைவாக, பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியினுள் தாபிக்கப்பட்டுள்ள பல்வேறு அலுவலகங்கள், பணியகங்கள், சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம், மாதிவெல உறுப்பினர் வீட்டுத் தொகுதி, நுவரெலியா சேனாதிபதி இல்லம், ஜயவடனகம பணியாட்டொகுதியினரின் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் அனுராதபுரம் மெத்செவன விடுமுறை விடுதி ஆகிய இடங்களுக்குரியதாக பின்வரும் பணிகள், வழங்கல்கள் மற்றும் சேவைகள் பணியகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

* சாதாரண அலுவலக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அலுவலக எழுதுகருவிகள், உபகரணங்கள், இயந்திரங்கள், உணவு மற்றும் பானங்கள் மற்றும் சீருடைகள் போன்ற அத்தியாவசியக் கொள்வனவுகளை மேற்கொள்ளல் மற்றும் அந்தத் திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் பணியகங்களுக்கு பிரத்தியேகமான முறையில் அந்தந்தத் திணைக்களங்கள் / பணியகங்களினால் மேற்கொள்ளப்படும் பணிகள் / வழங்கப்படும் சேவைகளுக்குத் தேவையானவற்றைக் கொள்வனவு செய்தல்.
* இந்த இடங்களில் மேற்கொள்ளப்படுகின்ற புதிய நிர்மாண வேலைகள், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அவ்விடங்களில் பயன்படுத்துவதற்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்.
* இந்த இடங்களிலுள்ள கட்டிடங்கள், நிறுவப்பட்டுள்ள தொகுதிகள், இயந்திரங்கள், தளபாடங்கள் போன்றவற்றின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்வதற்கும் அவ்விடங்களுக்குத் தேவையான பல்வேறு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* வருடாந்தப் பொருட் சுற்றாய்வு (Board of Survey) மற்றும் இருப்புச் சரிபார்ப்பு (Stock Verification) நடவடிக்கைகளை வழிநடத்துதல், அத்துடன் பாராளுமன்றத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருட்களை ஏலமிடுதல் (Auctions) போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக உதவிப் பணிப்பாளருக்கு (உணவு மற்றும் பானங்கள் கணக்குகள்) உதவி வழங்குதல்.

அதற்கமைவாக, வழங்கல்கள் மற்றும் சேவைகள் பணியகத்தினால் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், கீழே காட்டப்பட்டுள்ளவாறு பிரதானமாக 04 பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | **மூலதன பெறுகைகள்** (Civil Works) | - | **இணைப்பு** 1 |
| 2. | **வருடாந்த பொருட்கள்** (Goods) **பெறுகை மற்றும் கொள்வனவுகள்** | - | **இணைப்பு** 2 |
| 3. | **பராமரிப்பு மற்றும் சேவைகள்** (Repairs & Services) | - | **இணைப்பு** 3 |

மேற்படி பிரிவுகளுக்கு மேலதிகமாக, மீளாய்வுக்குரிய ஆண்டில் இலங்கை பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கிணங்க, பகல்நேர பராமரிப்பு நிலையமொன்றை நிறுவுவதற்காக அகில சீன மகளிர் சம்மேளனத்தினால் (ACWF) நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 27,004,150.00 பெறுமதியான பொருட்கள் தொகுதி மற்றும் அதற்கான உள்நாட்டு விடுவிப்புக் கட்டணங்கள், சுங்கக் கட்டணங்கள் மற்றும் ஏனைய அநுபந்தச் செலவீனங்களுக்கான ரூபா 21,213,164.00 செலவு என்பன பாராளுமன்றத்தின் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் விடயயங்களுக்காகச் செலவிடப்பட்ட மொத்தச் செலவு அண்ணளவாக ரூ. **605,756,828.29** ஆகும்.

## இணைப்பு 01

**2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதன (Civil Works) பெறுகைகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூலதன பெறுகைகள் தேசிய போட்டி நிலை விலைமனு மற்றும் சந்தை விலை ஒப்பீட்டு முறைகளின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டு மேற்கொள்ளப்பட்டன.

| தொ. இல. | பெறுகை பற்றிய விபரம் | நிறைவு செய்யப்பட்ட திகதி அல்லது நிறைவு செய்யப்படவுள்ள திகதி | செலவிடப்பட்ட / செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை (வரியுடன்) ரூ. | விசேட குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | தனிநபர் பொலிஸ் தங்குமிடத்தைப் (Barracks) பழுதுபார்த்தல். | 03.03.2025 | 24,564,511.37 | பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் நிறுத்தி வைத்தல் தொகையும் (Retention money) உள்ளடங்கலாகக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2 | சேவைப் பகுதியைச் (Service Yard) சுற்றிலும் அலுமினிய வேலியை அமைத்தல். | 16.09.2025 | 14,809,749.12 | ரூ. 742,683.30 நிறுத்தி வைத்தல் தொகை (Retention money) பொது வைப்புக் கணக்கில் வைப்பிடப்பட்டுள்ளது. |
| 3 | கழிவுநீர்ப் பம்பி அறைக்காக (Sewage Pump Room), நீர்மூழ்கும் (Submersible) மின்சாரத்தால் இயங்கும் ட்ரை-வெல் (Dry-well) வகை கழிவுநீர்ப் பம்பி இயந்திரங்கள் மற்றும் அது தொடர்பான உபகரணங்களை விநியோகித்தல் மற்றும் | 10.08.2025 | 22,640,655.03 | பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவுகள் செய்யப்படவுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவுதல். | | | |
| 4 | மேலதிகமாக இரண்டு நாய் கூடுகளை அமைத்தல். | 10.11.2025 | (5,400,000.00) | 2026 பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| **மொத்தம்** | | | **56,614,915.52** | |

## இணைப்பு 02

## 2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் (Goods) பெறுகை பற்றிய விபரங்கள்

பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக விலைகள் கோரப்பட்டு பின்வரும் பொருட்களுக்கான கொள்வனவுகள் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

| **தொ இல** | **பெறுகை பற்றிய விபரங்கள்** | **ஏற்ற செலவு (வரியுடன்) ரூபா** |
|---|---|---|
| 01 | பாராளுமன்றத்துக்கு உணவு பானங்கள் கொள்வனவு | 247,049,010.08 |
| 02 | குடிநீர் போத்தல்கள் (Bottled Drinking Water கொள்வனவு | 2,278,758.12 |
| 03 | சீருடைகள் கொள்வனவு செய்தல் (பாராளுமன்றம், கௌரவ சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம், நுவரெலியா சேனாதிபதி இல்லம், அனுராதபுரம் மெத்செவன விடுமுறை விடுதி). | 9,432,246.00 |
| 04 | துணிமணி (Linen Items) கொள்வனவு | 1,234,652.70 |
| 05 | சீருடைக்குரிய பணியாட்டொகுதிக்கு பாதணி கொள்வனவு – 2024 | 1,915,647.56 |
| 06 | 2026ஆம் ஆண்டுக்கான தினக்குறிப்பேடுகளை அச்சிடுதல் | 3,973,800.00 |
| 07 | சுத்தம் செய்யும் உபகரணங்களை வழங்குதல் (Cleaning Equipment) | 1,037,900.00 |
| 08 | சுத்தம் செய்யும் உருப்படிகளை வழங்குதல் (Cleaning Items) | 11,130,000.00 |
| 09 | காகிதாதிகள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களை வழங்குதல் | 21,150,587.41 |
| 10 | பாராளுமன்றத்தில் பயன்படுத்தும் வாகனங்களுக்குத் தேவையான டயர் மற்றும் ரியூப் கொள்வனவு | 5,122,345.42 |
| 11 | சீருடைகள் மற்றும் துணிமணிகளை சுத்தம் செய்தல் - (பாராளுமன்றம், கௌரவ சபா நாயகரின் | 16,187,296.68 |

| | | |
|---|---|---|
| | உத்தியோகபூர்வ இல்லம், நுவரெலியா சேனாதிபதி இல்லம், அனுராதபுரம் மெத்செவன விடுமுறை விடுதி) (Laundering Staff Uniforms and Linen) | |
| 12 | கடித உறைகள் கொள்வனவு | 2,103,000.00 |
| 13 | நினைவுப் பொருட்கள் கொள்வனவு (Purchase of Souvenir Items) | 2,324,271.97 |
| 14 | பூங்கா அலங்கரிப்புக்கு அவசியமான உபகரணங்களையும் நுகர்வுப் பொருட்களையும் வழங்குதல் | 450,000.00 |
| 15 | கணினி துணையுறுப்புகள் கொள்வனவு | 1,400,000.00 |
| 16 | நிழற்படங்களை அச்சிடுதல், நிழற்பட சட்டமாக்கல் மற்றும் நிழற்பட செருகேடு (ஆள்பம்) தயாரித்தல் | மேற்கொள்ளப் படவில்லை |
| 17 | பாராளுமன்றக் கட்டடத் தொகுதி, சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம், நுவரெலியா 'சேனாதிபதி இல்லம்', மாதிவெல உறுப்பினர்களின் வீட்டுத் தொகுதி, ஜயவடனகம பாராளுமன்றப் பணியாட்டொகுதியினரின் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் அனுராதபுரம் 'மெத்செவன' விடுமுறை விடுதி ஆகியவற்றின் சாதாரண திருத்த வேலைகள் மற்றும் சேவைகளுக்காகத் தேவையான பொருட்கள் மற்றும் திரவியங்களைக் கொள்வனவு செய்தல். | 15,980,821.37 |
| 18 | பாராளுமன்றக் கட்டடத் தொகுதி, சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம், நுவரெலியா 'சேனாதிபதி இல்லம்', மாதிவெல உறுப்பினர்களின் வீட்டுத் தொகுதி, ஜயவடனகம பாராளுமன்றப் பணியாட்டொகுதியினரின் உத்தியோகபூர்வ இல்லங்கள், அனுராதபுரம் "மெத்செவன" விடுமுறை விடுதி ஆகியவற்றில் மின்சாரம், வளிச்சீராக்கிகள், மின்-உர்த்திகள் போன்றவற்றின் மேம்படுத்தல்கள், மின்னியல் பழுதுபார்த்தல் பணிகள் மற்றும் சேவைகளுக்காகத் தேவையான பொருட்கள் மற்றும் திரவியங்களைக் கொள்வனவு செய்தல். | 10,244,519.30 |
| 19 | பாராளுமன்றத்தில் உள்ள கணினிகள் மற்றும் கணினித் தொகுதியுடன் தொடர்புடைய மேம்படுத்தல்கள் மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் (Computer Accessories) கொள்வனவு செய்தல். | 2,000,000.00 |
| 20 | உணவு மற்றும் குடிபானங்கள் (Catering Section), வீட்டுப் பராமரிப்பு (Housekeeping) ஆகிய பிரிவுகளுக்குத் தேவையான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் சாதனங்களைக் (Inventory Items) கொள்வனவு செய்தல். | 4,249,746.10 |
| 21 | உணவு மற்றும் குடிபானங்கள் (Catering Section), வீட்டுப் பராமரிப்பு (Housekeeping) ஆகிய பிரிவுகளுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை (Consumable Items) கொள்வனவு செய்தல். | 1,235,620.00 |

| | | |
|---|---|---|
| 22 | பாராளுமன்ற புத்தகக் கட்டுதல் பிரிவிற்குத் (Book Binding Section) தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்தல். | 299,202.60 |
| 23 | பாதுகாப்பு உபகரணங்களை (Safety Ware) அணிந்து கடமையாற்ற வேண்டிய பாராளுமன்றப் பணியாளர்களுக்காகப் பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல். | 511,320.00 |
| 24 | திகதி முத்திரைகள் மற்றும் ரப்பர் முத்திரைகளைத் தயாரித்தல். | 134,475.00 |
| 25 | பாராளுமன்றம் மற்றும் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நிறுவப்பட்டுள்ள மின்பிறப்பாக்கிகளுக்குத் (Generators) தேவையான எரிபொருளைக் கொள்வனவு செய்தல். | 1,894,100.00 |
| 26 | பாராளுமன்றம் மற்றும் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பயன்பாட்டிற்காக சமையல் எரிவாயுவைக் கொள்வனவு செய்தல். | மேற்கொள்ளப் படவில்லை |
| 27 | பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மொத்த எரிவாயுவைக் (Bulk Gas) கொள்வனவு செய்தல். | 3,050,850.00 |
| 28 | பாராளுமன்றத்திற்காக தினசரி பத்திரிகைகளைக் கொள்வனவு செய்தல். | 3,201,500.00 |
| 29 | சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம், நுவரெலியா சேனாதிபதி இல்லம், மாதிவெல உறுப்பினர் வீட்டுத் தொகுதி மற்றும் அனுராதபுரம் மெத்செவன விடுமுறை விடுதி ஆகிய இடங்களுக்குத் தேவையான வீட்டு மற்றும் இதர உபகரணங்கள், சாதனங்களை (Inventory Items) கொள்வனவு செய்தல். | 850,000.00 |
| 30 | பாராளுமன்றம் மற்றும் ஜயவடனகம பணியாட்டொகுதியினரின் உத்தியோகபூர்வ இல்லங்கள் ஆகிய இடங்களில் கழிவுநீர்த் தாங்கிகளைத் (Septic tanks) துப்பரவு செய்தல் மற்றும் கழிவுகளை அகற்றும் பணிகள். | 247,000.00 |
| 31 | பாராளுமன்றக் கட்டடத் தொகுதியினுள் தாபிக்கப்பட்டுள்ள கௌரவ சபாநாயகர், கௌரவ பிரதிச் சபாநாயகர், கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரின் அலுவலகங்களுக்குத் தேவையான ஏனைய உபகரணங்கள் மற்றும் சாதனங்களை (Inventory Items) கொள்வனவு செய்தல். | 74,417.20 |
| 32 | பாராளுமன்றத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளுக்குத் தேவையான உபகரணங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் மற்றும் அது தொடர்பான ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்தல். | 257,968.23 |
| 33 | பாராளுமன்றத்தினுள் அமைந்துள்ள அலுவலகங்கள் மற்றும் இணை நிறுவனங்களின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் ஏனைய நானாவித கொள்வனவுகள் (Miscellaneous). | 2,376,118.48 |

| | | |
|---|---|---|
| 34 | தளபாடங்களைப் மெருகூட்டும் பொருட்களைக் (Furniture Polishing Items) கொள்வனவு செய்தல். | 348,302.40 |
| 35 | தளபாடங்கள் கொள்வனவு செய்தல் | 1,909,112.74 |
| 36 | வளிச்சீராக்கிகள் (Air Conditioners) மற்றும் மின்விசிறிகளைக் கொள்வனவு செய்தல். | 1,498,585.27 |
| 37 | வெட்டப்பட்ட மலர்கள் மற்றும் புதிய மலர்களைக் (Cut flowers & fresh flowers) கொள்வனவு செய்தல். | 120,075.00 |
| 38 | பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர், கௌரவ பிரதிச் சபாநாயகர் மற்றும் கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரின் தேவைகளுக்காகப் பரிசுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல். | 245,437.80 |
| 39 | பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர், கௌரவ பிரதிச் சபாநாயகர் மற்றும் கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரின் பாராளுமன்றத்தின் அச்சிடல் தேவைகளை மேற்கொள்ளல். | 12,752,538.42 |
| 40 | பாராளுமன்றத்தின் தடாகத்திற்கு (Cascade Pond) துருப்பிடிக்காத உருக்கு (Stainless Steel) வலையொன்றைப் பொருத்துதல். | 240,000.00 |
| 41 | Purchase of Two Door Upright Chiller for Catering Stores | 1,885,782.78 |
| 42 | Purchase of 40 PCs, Windows OS, Office Package, 40 UPS, 05 Dot Matrix Printers and 10 Laser Printers | 17,342,845.86 |
| 43 | 03 தொலைக்காட்சி இயந்திரங்கள் கொள்வனவு செய்தல் - Digital Signage System | 524,970.00 |
| 44 | Purchase of Rack Server to Parliament Network Room | 5,434,844.00 |
| 45 | Fabrication, Supply and Fixing 01 no. of Aluminium Sliding Door and 02 Nos. of Aluminium Sliding Windows | 491,870.37 |
| 46 | Supply, Installation, Testing & Commissioning of Air Conditioning Unit for X-Ray Room at Pinniyara | 243,080.00 |
| 47 | Supply, Installation, Testing & Commissioning of Heavy Duty Conveyor Type Stainless Steel Dishwasher Machine | 9,429,868.52 |
| 48 | Supply, install, test & commission of Heavy Duty Stand Type Stainless Steel Meat Band Saw Machine | 3,249,193.72 |
| 49 | Supply and installation of Cold Room Chiller Unit for Parliament Complex | 1,872,288.40 |
| 50 | Installation of 15Nos Water Dispensers for Parliament | 480,000.00 |
| 51 | Fabrication of Stainless steel roof gutter for parliament | 91,500.00 |
| 52 | Refurbishment of Copper Door (ongoing & will be continue to 2026) | 1,718,930.43 |
| 53 | Renovation of selected washrooms | 23,163,618.11 |
| **மொத்தம் ரூபா** | | **460,272,379.62** |

**இணைப்பு 03**

## 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேவைப் பணிகள்

பெறுகை வழிகாட்டுதல்களுக்கு இணங்க, விலைமனுக் கோரப்பட்டு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகள், இயந்திர சாதனங்கள் அலுவலக உபகரணங்களோடு தொடர்பான பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேவைப் பணிகள் 2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

| தொடர் இலக்கம் | மேற்கொள்ளப்பட்ட சேவைகள் பற்றிய விபரம் | செலவினம் (வரி உள்ளடங்கலாக) ரூ. |
|---|---|---|
| 1. | தகவல் தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் உபரணங்ளோடு தொடர்பான சேவை ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் (Renewal of IT Contracts) | 15,779,422.57 |
| 2. | பாராளுமன்றத்தில் நிறுவப்பட்டுள்ள தீயணைப்பு உபகரணங்கள் Fire Extinguishers பராமரிப்பு மற்றும் மீள் நிரப்புதல் | 429,284.00 |
| 3. | புகைப்பட பிரதியெடுக்கும் இயந்திரங்களுக்கான (Photocopy Machines) பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேவைகள் | 4,865,547.70 |
| 4. | மின்னஞ்சல் உபகரணங்களுக்கான (Fax Machines) பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேவைகள் | 657,850.00 |
| 5. | மின்தூக்கிகளின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேவைகள் | 8,786,396.56 |
| 6. | பாராளுமன்ற கைரேகை பதிவு இயந்திரங்கள் தொடர்பான சேவை ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் | 399,500.00 |
| 7. | பாராளுமன்ற தளபாடங்கள் பழுதுபார்ப்பு | 1,580,550.00 |
| 8. | பாராளுமன்றத்தின் உணவு வழங்கல் வீடு பராமரிப்புத் திணைக்களத்தின் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் | 845,340.20 |

| | | |
|---|---|---|
| | சேவைகள். | |
| 9. | கௌரவ சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்திலுள்ள இயந்திர சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் தளபாடங்களின் பராமரிப்பு மற்றும் சேவைகள். | 872,800.00 |
| 10. | இணைப்புப் பொறியியலாளர் திணைக்களத்திலுள்ள உபகரணங்களின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேவைகள் | 1,852,109.12 |
| 11. | பூச்சி மற்றும் கரையான் கட்டுப்பாடு (பாராளுமன்றம், சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களின் தொகுதி) | 1,377,850.00 |
| 12. | பாராளுமன்ற வளாகத்திற்கான காப்புறுதி | 1,855,569.00 |
| 13. | பாராளுமன்றத்தில் நிறுவப்பட்டுள்ள ஒலி-ஒளி உபகரணங்கள் (Audio Visual Equipment) தொடர்பான பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் சேவைகள் | 1,350,000.00 |
| **மொத்தம் ரூ.** | | **40,652,219.15** |

## உணவு வழங்கல் கணக்குகள் அலுவலகம்

| பொறுப்புக்குரிய பகுதி | செயற்பாடுகள் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு | பெறுபேறு | % |
|---|---|---|---|---|
| நிதியல்லாத சொத்துகள் | விநியோகக் கட்டளையின்படி (Issue Order) நிலையான சொத்துகளைப் அறிக்கையிடுதல் மற்றும் மாற்றம் செய்தல் | T&A 66, பொது - 47 மற்றும் மதிப்பீட்டு சபை | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்குதல் | 90% |
| | திறைசேரியினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நிதியல்லாத சொத்துக்களை முகாமைசெய்யும் முறைமையுடன் பணியாற்றுதல் | NFAM மென்பொருள் மூலம் வாகனங்கள், இயந்திர சாதனங்கள், தளபாடங்கள் | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிதியல்லாத சொத்துகள் தெரிபடுதல். | 100% |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் அலுவலக உபகரணங்கள் குறித்த அறிக்கைகளை திறைசேரிக்குச் சமர்ப்பித்தல். | | |
| உணவு வழங்கல் கணக்குகள் | அமைச்சுக்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களிடமிருந்து உணவு மற்றும் குடிபானங்கள் தொடர்பான மாதாந்த வருவாயைச் சேகரித்தல் | மாதாந்த அறவிடுதல் கூற்று | உரிய நேரத்தில் அறவிடுதலைச் செய்தல். | 100% |
| | நுகரப்பட்ட உணவுகளின் செலவு, சேகரிப்பு மற்றும் உணவுக்கான வரவு-செலவுத் திட்டத்தை காட்டும் அறிக்கையை மாதந்தோறும் தயாரித்தல். | மாத இறுதி அறிக்கை | தீர்மானங்களை எடுப்பதற்காக தகவல்களை வழங்குதல். | 100% |
| | கட்டுப்பாடு மற்றும் விலை திருத்தம் செய்தலை கண்காணிப்பதற்கான செலவினை பகுப்பாய்வு செய்தல் | மாறுபாடு பகுப்பாய்வு அறிக்கை (Variance Analysis Report) மற்றும் திருத்தப்பட்ட உணவு வரவு செலவுத் திட்டம் | செலவுத் திறன் | 100% |
| | உணவு குடிபானப் பொருட்கள் பராமரிப்பு முறைமையைப் (Catering Item Maintenance System) பின்பற்றுவதற்கான பயனர் தேவைகளுடன் கூடிய | முறைமையின் மூலம் உருவாக்கப்பட்ட அறிக்கைகள் | தகவலின் துல்லியம் மற்றும் மனித உழைப்பைக் குறைத்தல் | 100% |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் | | | |

## உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்

| செயற்பாட்டுத் துறைகள் | உத்தியோகபூர்வ செயற்பாடுகள் | பொறுப்புக்கள் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் | எட்டப்பட்ட பெறுபபெறுபேறுகள் | எட்டப்பட்ட பெறுபேறுகள் (சதவீதமாக) |
|---|---|---|---|---|---|
| உணவக வசதிகளை வழங்குதல் | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உணவக வசதிகளை வழங்குதல் | பணிப்பாளர் (உணவு வழங்கல் மற்றும் வீடு பராமரிப்பு), சமையற்காரர், உதவிப் பணிப்பாளர் (உணவு மற்றும் பானம்) | 7,200 | 10,670 | 148% |
| உணவக வசதிகளை வழங்குதல் | கௌரவ உறுப்பினர்களின் விருந்தினர்கள் மற்றும் பணியாட்டொகுதிக்கு உணவக வசதிகளை வழங்குதல். | பணிப்பாளர் (உணவு வழங்கல் மற்றும் வீடு பராமரிப்பு), சமையற்காரர், உதவிப் பணிப்பாளர் (உணவு மற்றும் பானம்) | 302,400 | 361,930 | 119% |
| பயிலுநர்களை பயிற்றுவித்தல். | உணவக மற்றும் சேவை நடவடிக்கைகள் குறித்த பயிற்சி செயலமர்வு | பணிப்பாளர் (உணவு வழங்கல் மற்றும் வீடு பராமரிப்பு) | பயிற்சித் தொடர் 10 | 6 | 60% |
| பூ | அலங்கார மலர் | பணிப்பாளர் | கூட்ட | | 100% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அலங்காரங்கள் மற்றும் உட்புற அலங்காரம் | அமைப்புகள் மற்றும் அலங்காரத் தாவரங்களைக் கொண்டு உட்புற இடங்களை அலங்கரித்தல். | (உணவு வழங்கல் மற்றும் வீடு பராமரிப்பு) / நிறைவேற்றதிகாரி வீடு பராமரிப்பு | ம் நடைபெறும் வாரங்கள் - 1800 / கூட்டம் நடைபெறாத வாரங்கள் - 530, விசேட நிகழ்வுகள் – கோரிக்கைக் கேற்ப பெறுமானங்கள் மாறுபடும். | | |
| தோட்ட அலங்காரப் பணிகள் | தோட்டப் பராமரிப்பு, அலங்காரத் தாவர நாற்றுமேடை பராமரிப்பு | பணிப்பாளர் (உணவு வழங்கல் மற்றும் வீடு பராமரிப்பு சேவைகள்) / நிறைவேற்றதிகாரி வீடு பராமரிப்பு / தோட்ட மேற்பார்வை | சதுர அடி - 285245 | | 100% |
| ஆடை பராமரிப்பு மற்றும் முகாமை செய்தல் | சீருடைகள் மற்றும் துணி வகைகளைச் சுத்தம் செய்தல் மற்றும் நிர்வகித்தல் | பணிப்பாளர் (உணவு வழங்கல் மற்றும் வீடு பராமரிப்பு) /வீடு பராமரிப்பு உதவியாளர் | சாதாரண பெறுமதி 270,000 | 168,784 | 62% |
| சுத்தம் | பாராளுமன்ற | பணிப்பாளர் | சதுர | | 100% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செய்தல் மற்றும் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகளை முகாமை செய்தல் | வளாகத்தில் சுத்தம் செய்தல் நடவடிக்கைகள் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளை அமைத்தல் மற்றும் நிர்வகித்தல் | (உணவு வழங்கல் மற்றும் வீடு பராமரிப்பு) / சமையலறை மேற்பார்வை | அடி - 519,000 | | |

**<u>தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்</u>**

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை வினைத்திறனுடன் பேணிவருதல், இணையத்தள தொடர்புகளை மேம்படுத்துதல், பாராளுமன்ற அக இணையத்தை வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்கவாறு பேணிவருதல் மற்றும் முகாமை செய்தல், பாராளுமன்றத்தின் இணையத்தளத்தை இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களை பராமரிப்புச் செய்வதன் மூலம் பாராளுமன்றத்தின் சகல தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான நிருவாக செயற்பாடுகளையும் நிறைவேற்றல்.

**2025ஆம் ஆண்டின் தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் செயலாற்றுகை பின்வருமாறு.**

| நோக்கம் | உத்தேச செயற்பாடுகள் | வருட இறுதியில் செயலாற்றுகை |
|---|---|---|
| | I. பணியாட்டொகுதிக்கு திறன்விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். | 60% |
| | II. பணியாட்டொகுதியைச் சேர்ந்த மூன்று பேரை e - பாராளுமன்ற செயலமர்வில் பங்கேற்கச் செய்தல். | அமுல்படுத்த முடியவில்லை |
| | III. ICT கருவிகளின் பராமரிப்பும் மேம்படுத்துகையும் | 95% |
| | IV. 50 **கணனிகளையும்** (Windows OS **மற்றும்** Office Packages **உடன்**), 50 UPS **களையும்** 02 **அச்சு இயந்திரங்களையும்** | 80% |

| | | | |
|---|---|---|---|
| நிறுவனத் திறனை வலுவூட்டல் | | (Laser, colour) 10 டோகன் (Token) அச்சு இயந்திரங்களையும் Duplex Unit 01 கொள்வனவு செய்தல் | |
| | V. | ICT உட்கட்டமைப்பு வசதிகளை தொடர்ச்சியாக கண்காணித்தலும் பராமரித்தலும் | 95% |
| | VI. | இணைய வலைவாசலை (Intranet Portal) பராமரித்தல் | 95% |
| | VII. | i- parliament தரவுத்தளத்தை மேம்படுத்தல் | அமுல்படுத்த முடியவில்லை |
| | VIII. | ஆட்சேர்ப்பு மற்றும் மனிதவள முகாமைத்துவ தகவல் கட்டமைப்பை (MIS) தயாரித்தல் | அமுல்படுத்த முடியவில்லை |
| நிறுவனத் திறனை வலுவூட்டல் | IX. | தன்னியக்க விடுமுறை முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்துதல். | அமுல்படுத்த முடியவில்லை. |
| | X. | i-parliament கையடக்க தொலைபேசி செயலியின் பராமரிப்பு (அப்பில் தொலைபேசி) | 20% |
| | XI. | பாராளுமன்ற கையடக்க தொலைபேசி செயலியை அடிக்கடி தொடர்ச்சியாக இற்றைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் | 90% |
| | XII. | பெரிமீட்டர் பயவோல் (Perimeter Firewall) அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவ முறைமையை மேம்படுத்தல் | அமுல்படுத்த முடியவில்லை |
| | XIII. | மின்னஞ்சல் காப்பகம் | அமுல்படுத்த முடியவில்லை. |
| | XIV. | மேலதிக களஞ்சிய முறைமை (Backup & Restoring) | அமுல்படுத்த முடியவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | XV. | பணியாட்டொகுதி கையடக்கத் தொலைபேசி செயலியை (Mobile App) பராமரித்தல் (Android) | 95% |
| | XVI. | சூழல்சார் கண்காணிப்புக் கட்டமைப்பு (Environmental Monitoring System) | அமுல்படுத்த முடியவில்லை |
| | XVII. | புதிய இணையதளங்களுக்கான இணைய வசதிகளை இற்றைப்படுத்தல். (Web Upgrade) | அமுல்படுத்த முடியவில்லை. |
| | XVIII. | இணையதளத்திற்கான வன்பொருள் வசதிகளை மேம்படுத்துதல் | அமுல்படுத்த முடியவில்லை. |
| | XIX. | Firewall இணைய பயன்பாடு (WAF) | அமுல்படுத்த முடியவில்லை. |
| | XX. | பாராளுமன்ற CCTV கமரா கட்டமைப்பை புதிய 3 கமராக்களுடன் இற்றைப்படுத்துதல். | அமுல்படுத்த முடியவில்லை. |
| | XXI. | கௌரவ சபாநாயகர் அவர்களின் உத்தியோகபூர்வ இல்லத்தில் CCTV கமரா அமைப்பு பொருத்துதல் | அமுல்படுத்த முடியவில்லை. |
| | XXII. | மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் CCTV கமரா அமைப்பு பொருத்துதல் | அமுல்படுத்த முடியவில்லை. |
| | XXIII. | டிஜிடல் காட்சிப் பலகை (Digital Signage System) அமைப்பை இற்றைப்படுத்தல். | அமுல்படுத்த முடியவில்லை. |
| | XXIV. | உணவு குடிபானப் பொருட்களுக்கான தகவல் முகாமைத்துவ முறையை உருவாக்குதலும் ஆரம்பித்தலும் (CISM) | 50% |
| | XXV. | வருகை மற்றும் வெளியேறலை பதிவு | அமுல்படுத்த முடியவில்லை. |

| | | |
|---|---|---|
| | செய்தல் (Finger Print) முறைமையை இற்றைப்படுத்தல். | |
| | XXVI. Checkpoint Firewall முறைமையை இற்றைப்படுத்தல். | 100% |
| | XXVII. நூலக ஆவணமாக்கல் முறைமையை மேம்படுத்துதல் | அமுல்படுத்த முடியவில்லை. |
| சட்டவாக்கச் செயன்முறையை தகவல் தொழிநுட்பத்தி னூடாக வலுவூட்டல் | I. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவிற்கான தகவல் முகாமைத்துவ முறைமையை உருவாக்குதல் | 30% |
| | II. சபை ஆவண அலுவலகம் சார்ந்த ஆவண முகாமைத்துவ முறையை உருவாக்குதல் | அமுல்படுத்த முடியவில்லை. |
| | III. ஹன்சார்ட் திணைக்களம் மற்றும் அட்டவணைப்படுத்தல் (சூசிகை) உத்தியோகத்தர்களுக்கான ஆவண முகாமைத்துவ முறைமையை உருவாக்குதல் | 90% |
| | IV. துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கான இளைஞர் பிரதிநிதிகளை தெரிவுசெய்தல் மற்றும் பதிவுச் செயன்முறைக்கான இணையவழி முறைமையை உருவாக்குதல். | அமுல்படுத்த முடியவில்லை. |
| | V. செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி ஹன்சார்ட் அறிக்கைகளைச் தயாரித்தல். | 20% |
| அரசாங்க கண்காணிப்பை தகவல் தொழிநுட்பத்தி னூடாக வலுவூட்டல் | அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு தகவல் முகாமைத்துவ முறைமையை உருவாக்குதல் மற்றும் ஆரம்பித்தல். | 20% |

| | | |
|---|---|---|
| தலைமைத்துவம் மற்றும் பிரதிநிதித்துவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பணிப்பொறுப்பு சம்பந்தமாக விழிப்புணர்வூட்டல் | பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக MPP port/ செல்லிடத் தொலைபேசி செயலி குறித்து தெளிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல். | அமுல்படுத்த முடியவில்லை. |
| நிதி மற்றும் கணக்குகள் பணியகத்தின் செயன்முறைகளை வலுவூட்டல் | ஏனைய பணியாட்டொகுதிக்கான (கௌரவ சபாநாயகர்/பிரதி சபாநாயகர் மற்றும் பிரதிக் குழுக்களின் தவிசாளரின் பணியாட்டொகுதி) சம்பள தயாரிப்பு முறைமையை நிறுவுதல் | 100% |

- 2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட போதும் முழுமைப்படுத்த முடியாமல் போன தகவல் முறைமை அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குப் பதிலாக, நிறுவனத்தின் முன்னுரிமைத் தேவைகளின் அடிப்படையில் பின்வரும் வேலைத்திட்டங்கள் அபிவிருத்திசெய்யப்பட்டன.

1. நிலையியற் கட்டளை முகாமைத்துவ தகவல் முறைமை
2. சபா பீடத்தினுள் உறுப்பினர்களின் பேசும் நேரத்தை நிர்வகிப்பதற்கான தகவல் முறைமை
3. கூட்டணி பணியக (CPA) முகாமைத்துவ தகவல் முறைமை
4. புதிய இணையதளத்திற்கான API சேவைகளை அமைத்தல்
5. நுவரெலியாவில் உள்ள உறுப்பினர் உத்தியோகப்பூர்வ இல்லத்திற்கான கைவிரல் அடையாள இயந்திரமொன்றை பொருத்துதல்.
6. அணுகல் கட்டுப்பாட்டு முகாமைத்துவ தகவல் முறைமையை நிறைவு செய்தல்

**<u>தொடர்பாடல் திணைக்களம்</u>**

2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட, இலங்கைப் பாராளுமன்றத்தின் புதிய திணைக்களமான தொடர்பாடல் திணைக்களம் தற்போது இரண்டரை வருட காலமாக செயற்பட்டு வருகின்றது. இது இரு பிரதான பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. அந்த இரண்டு பிரிவுகளினாலும் 2022ஆம் ஆண்டில் அடைந்துகொண்ட முன்னேற்றம் பின்வருமாறு அமைகின்றது.

1. **ஊடகப் பிரிவு**

| நோக்கம் | உத்தேச செயற் பாடுகள் | முக்கிய செயல்பாட்டுக் குறியீடு KPI | எதிர்பார்க்க ப்பட்ட பெறுபேறு | சத வீத ம் | பொறுப்பை நிறைவேற் றாமைக்கா ன காரணம் | பொறு ப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1.பாராளு மன்ற அலுவல் கள் தொடர் பாக, பிரதான நீரோட்ட த்தில் இயங்கு ம் ஊடகங்க ள் மூலம் மேலதிக அறிவூட் டல்களை யும் பொதுமக் கள் பங்கேற் பையும் ஏற்படுத் துதல் | 1.பாரா ளுமன்ற த்தை மேம்படு த்துவத ற்கு ஊடக நிறுவன ங்களிட மிருந்து ஊடக பரப்புரை யைப் பெறுதல் | மூன்று மொழிகளிலும் 450-க்கும் மேற்பட்ட ஊடக அறிவித்தல்கள் வெளியிடப்பட்ட ன். பாராளுமன்றத்தி ன் அனைத்து நடவடிக்கைகளை யும் அறிக்கையிடுவத ற்கு ஊடகப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளதோடு அவை குறித்கு ஊடகங்களுக்கும் ஊடக அறிவித்தல்களை வெளியிட்டுள்ள ன. | 1.1பாராளும ன்ற நடவடிக்கை கள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்க ளை தெளிவூட்டுத ல் | 95% | 1.முறையான அனுமதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் சில பத்திரிகை செய்திகளை ஊடகங்களி ல் வெளியிடுவ தில் தாமதம் ஏற்பட்டது.<br><br>2. அதிகளவான குழுக் கூட்டங்க ளை அறிக்கையி ட வேண்டியிரு ந்தபோதிலும் , ஊடக அலுவலர்க ளின் எண்ணிக்கை போதுமான தாக இருக்கவில் லை.<br><br>3.பாராளுமன் றக் குழுக்கள் மற்றும் பிற நிகழ்வுகளை அறிக்கையி டுவதற்குப் | பணிப் பாளர் (தொடர் பாடல்), ஊடக முகா மையா ளர், ஊடக அலுவ லர்கள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தற்போதுள்ள தொழில்நுட்ப உபகரணங்கள் போதுமானதாக இல்லை. | |
| | 2.பாராளுமன்ற வளாகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்கு ஊடக நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தல் | பாராளுமன்றத்தை மேம்படுத்துவதற்காக ஊடக நிறுவனங்களிடமிருந்து ஊடகப் பிரச்சாரத்தை பெறுதல் | 2.1பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களை தெளிவூட்டுதல் | 0% | முறையான அனுமதி கிடைக்காமையால், பாராளுமன்ற வளாகத்திற்குள் நேர்காணல்களுக்கு மேலதிகமாகப் பதிவு செய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போனது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள் |
| | 3.பாராளுமன்றத்தில் சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கு சுற்றுலாத் திட்டங்களுக்கு | பாராளுமன்றத்தை மேம்படுத்துவதற்காக ஊடக நிறுவனங்களிடமிருந்து ஊடகப் பிரச்சாரத்தை பெறுதல் | 3.1பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களை தெளிவூட்டுதல் | 0% | இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டாலும் அவை வெற்றி பெறவில்லை. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அழைப்பு விடுத்தல். | | | | | |
| | 4.பாராளுமன்ற சனநாயகம் தொடர்பாக முக்கிய தலைப்புகளின் கீழ் பல்வேறு வகையான நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு ஊடக நிறுவனங்களை ஊக்குவித்தல் | பாராளுமன்றத்தை மேம்படுத்துவதற்காக ஊடக நிறுவனங்களிடமிருந்து ஊடகப் பிரச்சாரத்தை பெறுதல் மற்றும் மக்கள் கவனத்தைப் பெறுதல். | 4.1பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களை தெளிவூட்டுதல் | 90% | ஊடகப் பிரிவால் இது தொடர்பாக ஏராளமான ஊடக நிறுவனங்களை ஒருங்கிணைக்க முடிந்தது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள் |
| 2.பாராளுமன்ற நடவடிக்கைகளில் பொதுமக்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்காக சமூக ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத் | 1. புதிய அணுகுமுறைகளுடன் அதிகாரபூர்வ Facebook பக்கத்தை தினசரி இற்றைப்படுத்தி பேணுதல் | பாராளுமன்றத்தை மேம்படுத்துவதற்காக ஊடக நிறுவனங்களிடமிருந்து ஊடகப் பிரச்சாரத்தை பெறுதல் மற்றும் மக்கள் கவனத்தைப் பெறுதல். | 1.1பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களை தெளிவூட்டுதல் | 95% | பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக சமூக ஊடகங்கள் பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| துதல் | | | | | | |
| | 2.அதிகாரபூர்வ X(Twitter) கணக்கை பேணுதல் மற்றும் புதிய அணுகுமுறைகளுடன் இற்றைப்படுத்துதல் | பாராளுமன்றத்தை மேம்படுத்துவதற்காக ஊடக நிறுவனங்களிடமிருந்து ஊடகப் பிரச்சாரத்தை பெறுதல் மற்றும் மக்கள் கவனத்தைப் பெறுதல். | 2.1பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களை தெளிவூட்டுதல் | 95% | X(Twitter) இல் தினசரி இற்றைப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக சமூக ஊடகத் தளங்கள் தொடர்ந்து பராமரிக்கப்பட்டன. எனினும், X கணக்கில் நேரலை ஒளிபரப்பை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உரிய அனுமதி கிடைக்காததால் அது சாத்தியமாகவில்லை. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள் |
| | 3. Instagram கணக்கை பராமரித்து புதிய அணுகலுடன் தினசரி இற்றைப்படுத்து | பாராளுமன்றத்தை மேம்படுத்துவதற்காக ஊடக நிறுவனங்களிடமிருந்து ஊடகப் பிரச்சாரத்தை பெறுதல் மற்றும் மக்கள் கவனத்தைப் பெறுதல். | 3.1பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களை தெளிவூட்டுதல் | 95% | Instagram இல் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக சமூக ஊடகத் தளங்கள் தொடர்ந்து பேணப்பட்டன. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தல் | | | | | |
| | 4.உத்தியோகபூர்வ You tube சேனலை பராமரித்து, புதிய அணுகலோடு நாளாந்தம்இற்றைப்படுத்துதல் | பாராளுமன்றத்தை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட காணொளித் தயாரிப்புகளுக்கு பொதுமக்களின் கூடுதல் கவனத்தை பெற்றுக்கொள்ளல். | 4.1பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களை தெளிவூட்டுதல் | 50% | You tube சேணலில் வாராந்த இற்றைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. எனினும் அதிக வேலைப்பழு காரணமாக வீடியோ தயாரிப்பு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எனினும் பதிவேற்றப்பட்ட வீடியோக்களுக்கு அதிக மக்கள் வரவேற்பு கிடைத்தது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள் |
| 5.ஊடகவியலாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் வகையில் ஊடக நிலையத்தின் வினைதிறனை மேம்படு | 1. ஊடக நிலையத்திற்கான முறையான ஆவணமாக்கல் முறைமையைப் பேணுதல் | ஊடகவியலாளர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் வினைதிறனான சேவையை வழங்குதல். | 5.1ஊடகவியலாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நல்லுறவை வளர்த்து, நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கப் பணியாற்றுதல். | 75% | அங்கீகரிக்கப்பட்ட முறைமையாக்கம் மற்றும் பயன்பாடுகளுக்காக ஊடக நிலையத்தின் முறையான நடைமுறைகளை பேணிச்செல்ல முடிந்தது. 2023ஆம் ஆண்டு முதல் ஒளிப்பதிவு | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கிணைப்பு வழங்கல் சேவைகள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| த்துதல். | | | | | ஸ்டுடியோ வின் 'மல்டி-கேமரா ஸ்விட்ச்' பழுதடைந்துள்ளதால், பல கேமராக்களைப் பயன்படுத்திய வகையிலான படப்பிடிப்புகளை மேற்கொள்ள இயலவில்லை. (இது குறித்து 'வழங்கல் சேவைகள் பிரிவிடம்' தெரிவிக்கப்பட்டுள்ளது.) | பிரிவு |
| | 2.முறையான சரக்கிருப்பு விபரக் கட்டமைப் பொன்றை உருவாக்கி பேணுதல் | பாராளுமன்ற ஊடக நிலையம் மற்றும் ஒளிப்பதிவு கூடம் ஆகியவற்றை வினைதிறனான முறையில் நடாத்திச் செல்லுதல். | பாராளுமன்ற ஊடக நிலையம் மற்றும் ஒளிப்பதிவு கூடம் ஆகியவற்றைத் வினைதிறனான முறையில் நடாத்திச் செல்லுதல். | 95% | | ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கிணைப்பாளர். |
| | 3.பாராளுமன்றத்தை மேம்படுத்த ஒலி-ஒளி சார்ந்த | பாராளுமன்றத்தை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட காணொளிகளுக்குப் பொதுமக்களின் | 3.1பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிப்பொறுப்புக்கள் குறித்துச் | 50 % | அன்றாடம் அதிகளவிலான அறிக்கையிட வேண்டியேற்படுவதாலும் போதுமான | ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள்., |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் | கூடுதல் கவனத்தை பெறற்றுக்கொள்ளல். | சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஈர்த்துக்கொள்ளல். | | ஆளணியினர் இல்லாததாலும், ஒலி-ஒளித் தயாரிப்புப் பணிகள் குறைந்த அளவிலேயே காணப்பட்டன. எனினும், தயாரிக்கப்பட்ட காணொளிகள் ஊடகங்கள் வாயிலாக ஒளிபரப்பப்பட்டு, மக்களிடமிருந்து மிகவும் சாதகமான வரவேற்பைப் பெற்றன. | |
| 6.ஊடக வியலாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வசதியளிப்பதற்கு இடமளிக்க ஊடக நிலையத்தின் வினைத் திறனை | 1.ஊடக வியலாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் வகையில் ஒளிப்பதிவு கூடத்தின் வினைத் | கெமராக்கள், மின் விளக்குகள் போன்ற தேவையான புதிதுபடுத்தப்பட்ட உபகரணங்களைக் கொண்டு கூடத்தை வினைதிறன் மிக்கதாக மாற்றுதல். | 1.1உயர்தரத்திலான ஒலி-ஒளித் தயாரிப்புக்களுக்கான வசதிகளை செய்தல். | 40% | ஒலி-ஒளிப்பதிவு கூடத்தில் உபகரணங்களை புதுப்பிப்பதற்காக வழங்கல் மற்றும் சேவைகள் பிரிவிற்கு அனுப்பப்பட்டதுடன், வருட இறுதியாகின்றவரையிலும் சீரமைக்கப்ப | பணிப்பாளர் (தொடர் பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கிணைப்பு வழங்கல் சேவைகள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மேம்படுத்தல். | திறன் மேம்படுத்தப்பட்டமை. | | | | ட்டு கிடைக்காததால் கூடத்தின் ஒலி - ஒளிப்பதிவுப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. | பிரிவு |
| | 2.பாராளுமன்ற உறுப்பினர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஊடக நிலையத்தில் ஊடகச் சந்திப்புகளை ஏற்பாடு செய்தல். | கெமராக்கள், மின் விளக்குகள் போன்ற தேவையான புதிதுபடுத்தப்பட்ட உபகரணங்களைக் கொண்டு கூடத்தை வினைதிறன் மிக்கதாக மாற்றுதல். | 1.2பாராளுமன்ற உறுப்பினர்களின் தேவைகளின் அடிப்படையில் உயர்தர சேவைகளை வழங்குதல் | 75% | கடந்த ஆண்டு முழுவதும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளின் அடிப்படையில் பல ஊடகச் சந்திப்புகளை ஏற்பாடு செய்யவும், ஊடகவியலாளர்களை ஒருங்கிணைக்கவும் முடிந்தது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கிணைப்பாளர். |
| 7. பாராளுமன்ற அறிக்கையிடலின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் | 1. குழு அறிக்கையிடல் குறித்த ஊடக அலுவலர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் | பாராளுமன்றக் குழு அறிக்கையிடலின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல். | 7.1 தரம்மிக்க ஊடகச் செய்தியறிக்கையிடல். | 0% | | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | ணைப் பாளர். |
| | 2. சகல குழுக்கள், பணிகள் மற்றும் தூதுக்குழுவினர் தொடர்பான தகவல்களை அறிக்கையிட்டு ஊடகங்களுக்கு வெளியிடுவதற்குத் தேவையான ஊடகக் குறிப்புகளைத் தயாரித்தல். | பாராளுமன்றச் செய்தியறிக்கையிடலின் நம்பகத்தன்மையையும் துல்லியத்தையும் மேம்படுத்துதல். | 7.1 தரம்மிக்க ஊடகச் செய்தியறிக்கையிடல். | 95% | சகல குழுக்கள், பணிகள் மற்றும் தூதுக் குழுவினர் சுற்றுப் பயணங்கள் குறித்த தகவல்களை அறிக்கையிட்டு ஊடகங்களுக்கு வெளியிட்டதுடன், ஊடக அறிவித்தல்களுக்கான அனுமதியைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, சில அறிவித்தல்களை ஊடகங்களுக்கு உடனுக்குடன் வெளியிட இயலவில்லை. | பணிப் பாளர் (தொடர் பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கிணைப் பாளர். |
| 8.பாராளுமன்ற செயற்பாடுகள் பற்றிய ஆக்கத்திறன்மிகு காணொளி தயாரிப்புகளின் | 1.ஆக்கத் திறன்மிகு காணொளி தயாரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக | பாராளுமன்ற நடவடிக்கைகள் குறித்த ஆக்கபூர்வமான காணொளித் தயாரிப்புகள் மீது பொதுமக்களின் கூடுதல் கவனத்தை ஈர்க்கச்செய்தல். | 8.1.ஆக்கபூர்வமான காணொளித் தயாரிப்புகள் தொடர்பாக பொதுமக்களின் கவனத்தைப் பெறுதல் | 0% | நிலவிய சூழ்நிலை காரணமாக எவ்வித பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடாத்த முடியவில்லை. | பணிப் பாளர் (தொடர் பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நம்பகத்தன்மையை மேம்படுத்தல். | ஊடக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல் | | | | | லர்கள், ஊடக ஒருங்கிணைப்பாளர். |
| 9. மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் பொதுமக்களின் பங்கேற்பை அதிகரித்தல் | 1.பாராளுமன்றம் தொடர்பான ஆவணப்படமொன்றைத் தயாரித்தல். | 1. சமூக ஊடகங்களில் பார்க்கப்பட்ட தடவைகள் (Views), கருத்துகள் மற்றும் விருப்பத் தெரிவிப்புக்கள். (Comments and Likes) | 9.1பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 100 % | பாராளுமன்றம் குறித்த அதிகாரப்பூர்வ அறிக்கை நிகழ்ச்சித் திட்டம் நிறைவு செய்யப்பட்டு, மூன்று மொழிகளிலும் பணிப்பாளர் தகவல் தொடர்பாடல் இற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், அபிவிருத்திப் பங்காளர் (NDI) |
| 10.பாராளுமன்ற சனநாயகம் குறித்த கல்விசார் அறிஞர்கள்,ஆராய்ச்சியாளர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்களால் தொகுக்கப்பட்ட | 1."பாராளுமன்ற சார சங்ஹிதா" தொகுதிக்கான கட்டுரைகளை கோருதல். | பாராளுமன்ற சனநாயகம் குறித்த கல்விசார் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்களால் தொகுக்கப்பட்ட அண்மைக்கால ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பை உருவாக்குதல். | 10.1பாராளுமன்ற சனநாயகம் குறித்த சிறந்த வருடாந்த ஆய்வுச் சஞ்சிகையை வெளியிடுதல். | 100 % | கட்டுரைகளுக்கான அழைப்பு 2023 ஆகஸ்ட் 13 ஆம் திகதி நிறைவடைந்தது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அண்மைக்கால ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பை உருவாக்குதல். | | | | | | |
| | 2."பாராளுமன்ற சார சங்ஹிதா" தொகுதியை மீளாய்வு செய்தலும் அச்சிடுதலும். | பாராளுமன்ற சனநாயகம் குறித்த கல்விசார் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்களால் தொகுக்கப்பட்ட அண்மைக்கால ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பை உருவாக்குதல். | வருடாந்த ஆய்வுச் சஞ்சிகையை வெளியிடுதல். | 50% | கட்டுரை மீளாய்வுகளை நிறைவுசெய்து அச்சிடுவதற்குத் தயாராக வைத்திருந்த போதிலும், அச்சிடும் பணிக்கு உதவிய அபிவிருத்திப் பங்காளியான UNDP-யுடன் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அப்பணி நடைபெறவில்லை. அரசாங்க அச்சக திணைக்களத்தின் உதவியுடன் அச்சிடும் பணியை மேற்கொள்வது குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டாலும் அந்த முயற்சியும் | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், அபிவிருத்திப் பங்காளர் (UNDP) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | வெற்றிபெற வில்லை. | |
| 11. இதர ஆதாரங்கள் மூலம் பாராளுமன்றத்தின் பிம்பத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்குதல். | 1. பாராளுமன்றத்தின் பிம்பத்தை மேம்படுத்துவதற்கு கவர்ச்சிகரமான குறுங் காணொளி க்ளிப்புகளைத் தயாரித்தல். | உரிய தரமான மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல். | 11.1பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 80% | பாராளுமன்றத்தை மேம்படுத்துவதற்காகப் பல உயர்தர ஆவணப்படக் காணொளிகள் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொரு பாராளுமன்ற அலுவல் பற்றிய குழுவின் முடிவிலும், சபை முதல்வரின் அறிக்கை அனைத்து ஊடகங்களுக்கும் வெளியிடப்பட்டது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கிணைப்பாளர் |
| | 2. LED காணொளிகளை சுவர்களில்(LED Video Walls) திரையிடுவதற்கான ஊக்குவிப்பு காணொளி க்ளிப்பு தயாரிப்பு | உரிய தரமான மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல். | 10.2பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 0% | இடம்பெறவில்லை. நிலவிய சூழ்நிலைகள் காரணமாக செயற்படவில்லை. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கிணைப்பாளர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 3. அதிக செயல்திறன்மிகு இடைத் தொடர் பாடல் உத்தியாக பாராளுமன்ற இணையத்தளத்தில் நேரடி கலந்துரையாடல் மேல் மீட்பு கருவியை (pop-up-tool) நிர்மாணித்தல் | உரிய தரரமான மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல். | 10.4 பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிப்பொறுப்புகள் குறித்து பொதுமக்களை தெளிவூட்டுதல். | 50% | மறுசீரமைக்கப்பட்ட புதிய இணையதளம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் ஓரளவிற்கு நிறைவேற்றுகிறது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கிணைப்பாளர் |
| 12. பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | தொடர்பாடல் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு பணியாட்டொகுதியினருக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளை வழங்குதல். | வினைதிறன்மிக்க அலுவலர்களை உருவாக்குதல் | 12.1 மக்கள் நலன் சார்ந்த பாராளுமன்றத்திற்காக, மிகவும் வினைதிறனானஊடகப் பணியில் ஈடுபடுதல். | 0% | சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. | பணிப்பாளர் (தொடர்பாடல்), ஊடக முகாமையாளர், ஊடக அலுவலர்கள், ஊடக ஒருங்கிணைப்பாளர் |

02. **பொது மக்கள் சேவைப் பணியகம்**

| நோக்கம் | உத்தேச செயற்பாடுகள் | முக்கிய செயல்பாட்டுக் குறியீடு KPI | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு | சதவீதம் | பொறுப்பை நிறைவேற்றாமைக்கான காரணம் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|
| **1.மக்கள் தொடர்பு நிகழ்ச்சிகள் ஊடாக இலங்கைப் பாராளுமன்றம் தொடர்பாக பொது மக்களின் புரிதலை மேம்படுத்தல்.** | 1.1 பாடசாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல். | 1.1. 34 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.<br><br>1.2 பங்குபற்றியவர்களின் கருத்துகள்<br><br>1.3 நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கான பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை / ஊடகச் செய்திகளின் எண்ணிக்கை / செய்தி வெளியீடுகளின் எண்ணிக்கை<br><br>1.4 பாடசாலைகள்/ நிறுவனங்களுக்கு பாராளுமன்றம் குறித்த அச்சிடப்பட்ட வெளியீட்டுத் | 1.1பாராளுமன்றநடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்து மூன்று மொழிகளிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.<br><br>1.2. நிலையான அபிவிருத்தி மற்றும் திறந்த பாராளுமன்ற நோக்கங்களுக்கு இணங்க, சமூகத்திற்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துதல். | 100% | - | பணிப்பாளர் (தொடர்பாடல்), பொது மக்கள் தொடர்பாடல் முகாமையாளர்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலர்கள்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலக ஒருங்கிணைப்பாளர்கள். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தொகுப்புகளை வழங்குதல் | | | | |
| **2.இலங்கை பாராளுமன்றத்திற்கு வருகை தரும் இராஜந்திரிகள்மற்றும் சிறப்பு விருந்தினர்கள் உள்ளிட்ட அனைத்து விருந்தினர்களையும் வரவேற்றல், அவர்களைத் தெளிவூட்டுதல் மற்றும் பாராளுமன்றம் குறித்த சரியான புரிதலை ஏற்படுத்துதல்**. | 2.1.பாராளுமன்றத்தின் பணிகள் மற்றும் வரலாற்றுப் பெறுமானங்கள் குறித்த துல்லியமான மற்றும் நம்பகமான தகவல்களைப் விருந்தினர்களுக்கு வழங்குதல். | 2.1. 2025ஆம் ஆண்டுடன் தொடர்பில் வருகைதந்த விருந்தினர்களின் எண்ணிக்கை - 1,17,352 (அண்ணளவாக)<br><br>2.2 மாதாந்தம் பாராளுமன்றத்திற்கு வருகைதரும் விருந்தினர்களின் எண்ணிக்கை: 10,663 (அண்ணளவாக)<br><br>2.3பாராளுமன்றத்திற்கு வருகை தந்த பாடசாலைகளின் எண்ணிக்கை 900 (அண்ணளவாக) | 2.1பாராளுமன்றத்தின் பணிகள் குறித்கு சகல விருந்தினர்கள் மற்றும் மாணவர்களுக்கு மும்மொழிகளில் சிறந்த தெளிவூட்டலை வழங்குதல். | 100% | - | பணிப்பாளர் (தொடர்பாடல்), பொது மக்கள் தொடர்பாடல் முகாமையாளர்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலர்கள்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலக ஒருங்கிணைப்பாளர்கள். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. **மாணவர் பாராளுமன்றத்தின் மூலம் இந்நாட்டின் மாணவர் சமூகத்திற்கு பாராளுமன்றம் குறித்த பரந்த புரிதலை வழங்குதல்.** | 3.1. கல்வி அமைச்சு மற்றும் சனாதிபதி செயலகம் ஆகியவற்றுடன் இணைந்து, நாடு முழுவதும் உள்ள மாணவர் பாராளுமன்றங்களுக்கு பாராளுமன்றம் தொடர்பான அறிவு, கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களைப் பகிர்ந்துகொள்ளல்.<br><br>3.2.பாடசாலைகள், கல்வி அமைச்சு, இலங்கைப் பாராளுமன்றம் மற்றும் சனாதிபதி செயலகம் ஆகியவற்றிற்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணுதல்.<br><br>3.3. தேவையான பாடசாலைகளுக்கு ஆரம்ப அமர்வுகளை சனாதிபதி செயலகத்தில் | 3.1பார்க்கப்பட்ட தடவைகள், பதில்கள் மற்றும் கருத்துகள்<br><br>3.2 பங்கேற்ற பாடசாலைகள்/மாணவர் பாராளுமன்றங்களின் எண்ணிக்கை - 27<br><br>3.3. ஊடக செய்தி சேகரிப்பு | 3.1 எதிர்காலப் பிரசைகளான மாணவர் சமூகத்தினருக்கும், குறிப்பாகப் கஷ்டப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், பாராளுமன்ற மரபுகளை அறிந்துகொள்ளும் வாய்ப்புகளை வழங்குதல். | 95% | ஒவ்வொரு பாடசாலையும் முன் வைக்கும் கோரிக்கைகளை நடைமுறைக் காரணங்களின் நிமித்தம் நிறைவேற்றுவது கடினமாக உள்ளது.<br><br>நேரம் மற்றும் குறைந்த பணியாளர்கள் (09) காரணமாக, ஒவ்வொரு கோரிக்கையையும் நிறைவேற்றுவது | பணிப்பாளர் (தொடர்பாடல்), பொது மக்கள் தொடர்பாடல் முகாமையாளர்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலர்கள்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலக ஒருங்கிணைப்பாளர்கள். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | நடத்துதல்.<br><br>3.4.தலைநகருக்கு வருவதில் சிரமமான பாடசாலைகளைத் தனியாக அடையாளம் கண்டு, அவற்றுக்கான வெளிக்கள பொதுச் சேவை நிகழ்ச்சிகளை நடத்துதல்.<br><br>3.5 சகல பாடசாலைகளுக்குமான மாணவர் பாராளுமன்றத்தை நடாத்தும் எண்ணக்கரு, கருத்துக்களை முன்வைத்தல் மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம் ஆகியன குறித்த அறிமுகப் செயலமர்வொன்றை (பாடசாலைகளிலேயே அல்லது இணையவழியில்) நடத்துதல். | | | | கடினமாக உள்ளது. | |
| 4.**பாராளுமன்றக் கோட்பாடு,** | 4.1 பாராளுமன்ற உறுப்பினர்கள் | 4.1நடைமுறைப்படுத்திய நிகழ்ச்சிகளி | 4.1பங்கேற்பாளர்களுக்கு பாராளுமன்ற | 90% | ஒவ்வொரு நிறுவ | பணிப்பாளர் (தொடர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைகள் மற்றும் அதன் சமூகப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான விஷேட நிகழ்ச்சிகளை நடாத்துதல்.** | மற்றும் விஷேட கோரிக்கைகளை முன்வைக்கும் விருந்தினர்களுக்காக, பாராளுமன்றம் குறித்த விஷேட பொதுச் சேவை நிகழ்ச்சிகளை நடத்துதல்.<br>• *மாற்றுத் திறனாளிகளுக்கான தினம்*<br>• *சர்வதேச மகளிர் தினம்* | ன் அளவு - 34<br><br>4.2 நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்கள் / செய்தி அறிவித்தல்கள் /பங்குபற்றியவர்களிடமிருந்து கிடைத்த பின்னூட்டங்கள்<br><br>4.3 ஊடக அறிவிப்புக்கள் | த்தின் நடைமுறைகள் மற்றும் பணிகள் குறித்த கூடுதல் விழிப்புணர்வைப் பெறல். | | னத்தின் மூலமும் விடுக்கப்படும் கோரிக்கைகளை பூர்த்தி செய்வது நடைமுறையில் கடினமாக உள்ளது.<br><br>தற்போது, பல பல்கலைக்கழகங்கள் பாராளுமன்றம் தொடர்பான விளக்கப் பயிற்சிகளை நடத்த ஆர்வமாக உள்ளன. | பாடல்), பொது மக்கள் தொடர்பாடல் முகாமையாளர்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலர்கள்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலக ஒருங்கிணைப்பாளர்கள் |
| 5.**திறந்த பாராளுமன்ற எண்ணக்கருவ பிரபல்யப்படுத்தி தெரிவுசெ** | 5.1. திறந்த பாராளுமன்றம்' எனும் எண்ணக்கருவின் கீழ் நிகழ்ச்சிகள் மற்றும் | 5.1.நடைமுறைப்படுத்திய நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை /தரப்பினர்கள் /பங்கேற்பாள | 5.1.இலங்கையில் திறந்த பாராளுமன்றச் செயன்முறை மற்றும் அதன் பணிகள் குறித்து | 0% | இந்த எண்ணக்கருவஊக்குவிப்பதற்காக சர்வதேச | பணிப்பாளர் (தொடர்பாடல்), பொது மக்கள் தொடர்பா |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **ய்யப்பட்ட சமூகங்களுக்காக விசேட விழிப்புணர்வு செயலமர்வுகளையும் நிகழ்ச்சிகளையும் நடத்துதல்** | செயலமர்வுகளை நடாத்துவதற்கான உதவிகள் தொடர்ந்தும் இலங்கைக்கு கிடைக்காமை. | ர்கள்/ஊடகச் செய்திகள்/செய்தி வெளியீடுகள் /பார்வையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டல்கள். | பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.<br><br>5.2. திறந்த பாராளுமன்ற எண்ணக்கருவுக்கு இணங்க, பாராளுமன்றம், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், இளைஞர் சமூகம் மற்றும் பிற சிறப்புச் சமூகங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துதல். | | அமைப்புகளிடமிருந்து இந்நாட்டிற்கு இனியும் நிதி உதவி கிடைக்காததால், வெளிப்புற பொதுச் சேவைத் திட்டங்களையோ அல்லது செயலமர்வுகளையோ நடத்துவது சாத்தியமில்லை. | டல் முகாமையாளர்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலர்கள்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலக ஒருங்கிணைப்பாளர்கள். |
| 6.**மாற்றுத் திறனாளி சமூகத்தினருக்கு பாராளுமன்ற நடவடிக்கைகள் குறித்து தெளிவூட்டுவதற்கான நவீன முறைகளை அறிமுகப்படுத்துதல்.** | 6.1. விஷேட தேவையுடைய பாராளுமன்ற உறுப்பினருக்காக, பாராளுமன்ற ஆவணங்களை பிரெய்லி (Braille) முறையிலும் மற்றும் ஒலி வடிவங்களுக்கு மொழிபெயர்ப்பதற்கான | 6.1இலங்கை விழிப்புலனற்றோர் பாடசாலையுடன் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை / ஒலி வடிவத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்கள் / பாராளுமன்ற | 6.1இலங்கையின் சனத்தொகையில் 5% தைக் கொண்ட இந்த மாற்றுத்திறனாளிகள் சமூகத்தின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, பொது உறவுகளை வலுப்படுத்து | 25% | உயர்மட்ட நிர்வாகத்திற்கும் விழிப்புலனற்றோர் பாடசாலைக்கும் இடையிலான கலந்துரையாடல்கள் | பணிப்பாளர் (தொடர்பாடல்), பொது மக்கள் தொடர்பாடல் முகாமையாளர்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உதவியை வழங்குதல்<br><br>6.2. இலங்கை விழிப்புலனற்றோர் பாடசாலையுடன் இணைந்து, ஆவணங்களை ஒலி வடிவங்களுக்கு மொழிபெயர்ப்புச் செய்வதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் | த்தின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு மொழிபெயர்ப்பதற்கு தேவையான ஒருங்கிணைப்பை செய்தல். | தல். | | மூலம் தேவையான கோரிக்கைகள் தீர்மானிக்கப்பட்டன. | கள்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலக ஒருங்கிணைப்பாளர்கள். |
| **7.இலங்கைப் பாராளுமன்றம் குறித்த கல்விசார் பெறுமானங்களுடன் கூடிய ஒலி-ஒளித் தயாரிப்புக்களைச் செய்தல்.** | 7.1பாராளுமன்றத்திற்கு நேரில் செல்ல இயலாத பாடசாலைச் சமூகம் மற்றும் பொதுமக்களுக்குபாராளுமன்றம், அதன் பணிகள் மற்றும் எண்ணக்கருக்கள் குறித்த அறிவை வழங்கும் வகையில் ஒரு களப்பயணத்தை வடிவமைத்தல்.<br><br>7.2 தரப்பினர்களி | 7.1. நிறைவு செய்யப்பட்ட களச் சுற்றுப்பயணத்தின் திருத்தப்பட்ட பிரதிகளை உயர் நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருதல் / அக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துதல். | 7.1 கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொதுமக்களை பாராளுமன்றத்தின் அலுவல்கள் குறித்து எளிமையாக தெளிவூட்டுதல். | 70% | இத்திட்டத்திற்கான நிதி உதவி கிடைத்துள்ளது.<br><br>களச் சுற்றுப் பயணம் உயர் முகாமைத்துவத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), பொது மக்கள் தொடர்பாடல் முகாமையாளர்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலர்கள்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலக ஒருங்கிணைப்பாளர்கள். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | டையே ஒருங்கிணைப் புச் செய்தல். | | | | | |
| **8. இலங்கை பாராளுமன்றத்தில் டிஜிட்டல் அணுகல்தன்மை** | 8.1. இலங்கைப் பாராளுமன்றத்தில் பொதுமக்கள் தொடர்பாடலுக்கான தனித்துவமான டிஜிட்டல் அணுகுமுறை குறித்த எண்ணக்கருப் பத்திரத்தை சமர்ப்பித்தல். | 8.1நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் உயர் நிர்வாகத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளல். | 8.1 டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற பொது மக்கள் சேவைகளுக்கான டிஜிட்டல் அணுகலை உருவாக்குதல். | 10% | இந்த அணுகலுக்கான நிதி உதவி கிடைத்துள்ளது. எண்ணக்கருப் பத்திரம் உயர்மட்ட நிர்வாகத்தின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. | பணிப்பாளர் (தொடர்பாடல்), பொது மக்கள் தொடர்பாடல் முகாமையாளர்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலர்கள்/ பொது மக்கள் தொடர்பாடல் அலுவலக ஒருங்கிணைப்பாளர்கள். |

**<u>உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு</u>**

## <u>இப்பணியகத்தினால் 2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள் கீழ்வருமாறு</u>

- குறைந்தபட்ச பணியாளர்களின்கீழ்கூட வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை செயல்படுத்துவதில் 60% செயற்திறனை அடைதல்.
- 2025 ஆம் ஆண்டில், பாராளுமன்றத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு, அக் குழுவால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுதல்

மற்றும் அதுதொடர்பான பின்னாய்வு நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.

- கணக்காய்வுத் திட்டத்திற்குப் புறம்பாக அவசர மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கணக்காய்வுகளை மேற்கொண்டு தேவையான செம்மையாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மேலும் வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அரசாங்க கணக்காய்வுப் பிரிவால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு வினவல்களை ஆராய்ந்து நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கைக்கு இணங்க, நிறுவனத்தின் உள்ளக அலுவல்கள் பிரிவை நிறுவுவதிலும் அதன் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் தலையீடு செய்தல்.

**தகவல் அறியும் உரிமை பற்றிய அலகு**

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு இணங்க நிறுவப்பட்ட தகவல் அறியும் அலகின் 2025ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை பின்வருமாறு அமைகின்றது.

| | |
|---|---|
| வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை | 216 |
| தகவல் வழங்க மறுக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | 71 |
| பெயரிடப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 46 |

**வெளிநாட்டு உறவுகள் மற்றும் கூட்டணிப் பணியகம்**

2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உறவுகள் மற்றும் கூட்டணிப் பணியகத்தினால் பிரதானமாக பொதுநலவாயப் பாராளுமன்ற சங்கம், சர்வதேசப் பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் சார்க் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கம் ஆகிய சங்கங்களுக்குரிய அனைத்துப் பணிகளும் சேவைகளும் ஆற்றப்பட்டன.

இதன்போது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாநாடுகள், பட்டறைகள், விஜயங்கள், கூட்டங்கள், ஆய்வுச் சுற்றுப்பயணங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய அனைத்துக் காரியங்களும் ஒழுங்கமைக்கப்பட்டன.

- செயற்கை நுண்ணறிவு (AI) பாதுகாப்புப் பற்றிய பட்டறை, வெஸ்ட்மினிஸ்டர், லண்டன், 2025 ஜனவரி 27 முதல் 31 வரை

- முதலாவது இணைந்த மாற்றுக் கொள்கை நிலையத்தின் ஆசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய பிராந்திய மாநாடு, லாகூர், பாகிஸ்தான், 2025 பெப்ரவரி 6 முதல் 10 வரை
- 150 ஆவது சர்வதேச பாராளுமன்ற மாநாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய கூட்டங்கள், தாஷ்கண்ட், உஸ்பெகிஸ்தான் - 2025 ஏப்ரல் 4 முதல் 10 வரை
- பொதுநலவாய பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் 'பெண்களை பொருளாதார வலுவூட்டுகையின் முன்னோடிகளாகச் செயலாற்றுதல்' பற்றிய பட்டறை, பஹாமாஸ், 2025 ஏப்ரல் 28 முதல் மே 02 வரை
- இந்திய பாராளுமன்ற ஆய்வுகள் மற்றும் பயிற்சிக்கான பணியகம் ஒழுங்கமைத்த திறன் அபிவிருத்தித் திட்டம், 2025 மே 25 முதல் 31 வரை
- அணுப் பொருட்களின் பௌதீகப் பாதுகாப்புப் பற்றிய சமவாயம் மற்றும் அதன் திருத்தங்கள் குறித்து விழிப்புணர்வூட்டுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தல், வியன்னா, ஆஸ்திரியா, 2025 ஜூன் 02 முதல் 04 வரை
- ஆசிய பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அதிகாரிகளின் 3 ஆவது வருடாந்த மாநாடு, சியோல், கொரியா, 2025 ஜூன் 24 முதல் 27 வரை
- இலங்கையின் இளைஞர் பிரதிநிதிகள் குழுவின் சீன விஜயம், நிங்ஸியா ஹுய், சீனா, 2025 ஜூலை 20 முதல் 25 வரை
- இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பட்டறை, பீஜிங், சீனா, 2025 ஜூன் 20 முதல் ஜூலை 06 வரை
- பாராளுமன்ற சபாநாயகர்களின் ஆறாவது உலக மாநாடு, ஜெனீவா, சுவிட்சர்லாந்து, 2025 ஜூலை 29 முதல் 31 வரை
- இலங்கை - இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஆய்வுச் சுற்றுப்பயணம், இந்தியா, 2025 ஆகஸ்ட் 26 முதல் 30 வரை
- இலங்கை அரசியல்வாதிகளுக்கான சுவிட்சர்லாந்து ஆய்வுச் சுற்றுப்பயணம், சுவிட்சர்லாந்து, 2025 செப்டம்பர் 14 முதல் 21 வரை
- 68 ஆவது பொதுநலவாய பாராளுமன்ற மாநாடு, பிரிட்ஜ்டவுன், பார்படோஸ், 2025 அக்டோபர் 05 முதல் 12 வரை
- பொதுநலவாய காலநிலை ஒன்றியத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட காலநிலை மாற்றம் பற்றிய மாநாடு, ஐக்கிய இராச்சியம், 2025 அக்டோபர் 14 முதல் 16 வரை
- 151ஆவது சர்வதேச பாராளுமன்ற மாநாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய கூட்டங்கள், ஜெனீவா, சுவிட்சர்லாந்து - 2025 அக்டோபர் 18 முதல் 25 வரை
- ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவின் ஐக்கிய இராச்சிய விஜயம், ஐக்கிய இராச்சியம், 2025 அக்டோபர் 26 முதல் 29 வரை

- சட்டவாக்கத்தில் பாலின சமத்துவத்தை மேம்படுத்தல்: பாலின உணர்திறன் மிக்க சட்ட வரைவுகளைத் தயாரித்தல் பற்றிய பட்டறை, இஸ்லாமாபாத், பாகிஸ்தான், 2025 டிசம்பர் 14 முதல் 15 வரை

பாராளுமன்ற நட்புறவுச் சங்கங்கள் பணிகளுடன் தொடர்புடையதாக 10 ஆவது பாராளுமன்றத்தில் தற்போது சுமார் 26 சங்கங்கள் மீள நிறுவப்பட்டுள்ளன.
பாராளுமன்ற அதிகாரிகளுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறு வெளிநாட்டு ஆய்வுச் சுற்றுப்பயணங்கள் தொடர்பான பல்வேறு பணிகள்.

சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரைச் சந்திப்பதற்காக வருகை தந்த பல்வேறு இராஜதந்திர மற்றும் ஏனைய வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழுக்களுடன் தொடர்புடைய கூட்டணிப் பணிகள்.
அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயணங்களுடன் தொடர்புடைய விசாக்கள், இராஜதந்திர கடவுச்சீட்டுகள் மற்றும் விமான நிலைய விசேட விருந்தினர் முனையங்களை ஒதுக்கும் பணிகள் மற்றும் விமான நிலையம் சார்ந்த கூட்டணிப் பொறுப்புகள்.

## பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் இணைப்புச் செயலாளரின் அலுவலகம்

| | முன்மொழியப்பட்ட செயற்பாடு | முன்னேற்றம் | எதிர்பார்க்கப்படும் இலக்கு | விளைவு |
|---|---|---|---|---|
| **பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலக தினசரி நடவடிக்கைகள்** | அன்றாடப் பணிகள், முகாமைத்துவம்<br><br>- பாராளுமன்ற செயலாளர் நாயகம் அலுவலகத்தின் பணிகளுடன் தொடர்புடைய அரச / அரச சார்பற்ற / சர்வதேச அதிகாரிகளை ஒருங்கிணைத்தல்<br><br>- பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும் போது உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் கலந்துகொள்ளல். | 90% | அன்றாடப் பணிகளை முறையாக முகாமைத்துவம் செய்தல் | **அபிவிருத்தி உதவியாளர்களுடன் சிறந்த தொடர்புகளைப் பேணல்** |
| **குழுக்கள்** | பாராளுமன்றத்தின் பணிகளுடன் தொடர்புடைய பிரதான தலைப்புகளின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அறிமுக அமர்வுகளை | 90% | குழுக்களை வலுப்படுத்துதல் மற்றும் இயலளவு அபிவிருத்தி | **Max Planck Foundation ஊடாக நடாத்தப்பட்ட வழிகாட்டல் கருத்தரங்குத் தொடர்** |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒழுங்கமைத்தல். | | | |
| | நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல். | 90% | | **Max Planck Foundation ஊடாக நடாத்தப்பட்ட பட்டறை** |
| | குழுக்களின் மேற்பார்வைக்கான சிறந்த நடைமுறைகள் குறித்த பரந்த வழிகாட்டல்கள் மற்றும் நிலையான செயற்பாட்டு நடைமுறைகளை (SOPs) அபிவிருத்தி அபிவிருத்தி. | 60% | குழுச் செயற்பாடுகளைத் தரப்படுத்துதல் | **நிதி மேற்பார்வை மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் வழிகாட்டல்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.** |
| | குழுக்களுக்கான தொழில்நுட்ப ஆதரவை மேம்படுத்துவதை ஒருங்கிணைத்தல். | 50% | | |
| | குழுக்கூட்டங்களைப் பொதுமக்களுக்குத் திறப்பதன் மூலம் வெளிப்படைத்தன்மைக்கு வசதியளித்தல். | 40% | | |
| | சமூக உள்ளடக்கம் மற்றும் பாலினப் பாகுபாடற்ற பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காகக் குழுக்களின் இயலளவை அபிவிருத்தி செய்தல். | 40% | | |
| **திறந்த பாராளுமன்ற எண்ணக்கரு** | பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், சிவில் சமூக அமைப்புகள், மாணவர் பாராளுமன்றங்கள் ஆகியவற்றிற்கான விழிப்புணர்வுத் திட்டங்களை ஒருங்கிணைத்தல். | 60% | பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வை மேம்படுத்தல் | **நாடாளுமன்றத் தகவல் துண்டுப்பிரசுரத் தொடரை இற்றைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.** |
| | பாராளுமன்றப் பணிகளில் பொதுமக்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கான புதிய கருவிகளை அபிவிருத்தி செய்தல், | | பொதுமக்களின் பங்கேற்புக்கான தொழில்நுட்ப மேம்பாடு | மெற்றா பாராளுமன்ற இணைய வடிவமைப்பு அபிவிருத்தியின் இரண்டாம் கட்டம் தொடர்பாக UNDP |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொதுமக்களின் பங்கேற்புக்கான கருவியாக இணையப் பக்கமொன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் வளங்களை வழங்குதல் | 50% | | உடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. |
| **மனித வள அபிவிருத்தி** | மனிதவளத் திட்டமொன்றைத் தயாரிப்பதில் ஒருங்கிணைப்புச் செய்தல் | 50% | பயிற்சித் தேவைகளை இனங்காணுதல் | |
| | பாராளுமன்றப் பயிற்சிப் பிரிவிற்கான செயற்பாட்டுக் கையேடொன்றைத் தயாரித்தல் | | | |
| | மின்னணு பாராளுமன்ற ஆவண முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை (e-DMS) நிறுவுவதை ஒருங்கிணைத்தலும் ஆதரவளித்தலும். | | | |
| | ஊழியர்களுக்கான தலைமைத்துவத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆதரவளிப்பதற்காகப் பொருத்தமான பங்காளர்களாகக் ஆராய்ச்சி நிறுவனங்களை இனங்காணுதல். | | ஊழியர்களின் இயலளவை அபிவிருத்தி செய்தல் | |
| **பாராளுமன்றம் அதன் சட்டரீதியான பங்கினை ஆற்றுவதற்குத் துணைபுரியும் சட்ட மற்றும் கொள்கை ரீதியான கட்டமைப்பொன்றை அங்கீகரித்துச் செயல்படுத்துவதை ஒருங்கிணைத்தல்** | அனைத்துச் செயல் முறைகளுக்குமாக அங்கீகரிக்கப்பட்ட பணிக்கையேடுகளை மீளாய்வு செய்தல். | | சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்புகளைத் திருத்துதல் | |
| | பாராளுமன்றத்தைத் திறந்த மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய ஒரு நிறுவனமாகப் பிரதிபலிப்பதற்காகத் திருத்தப்பட வேண்டிய சட்டச் சீர்திருத்தங்களை இனங்காணுதல். | | | |
| **பயனுள்ள, பொறுப்புக்கூற** | குழுக்களுக்குத் தேவையான | | பாராளுமன்றக் | Max Planck Foundation ஊடாக |

| | | | | |
|---|---|---|---|---|
| **த்தக்க சான்றுகள் அடிப்படையிலான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வொன்றிற்காகப் பாராளுமன்றத்தினுள்ளே இயலளவை நிலைநிறுத்துவதை ஒருங்கிணைத்தல்.** | வளங்களை இனங்காணுதல் மற்றும் அபிவிருத்தி உதவி நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல் | | குழுக்களுக்கான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு ஆதரவை மேம்படுத்தல் | **நடாத்தப்பட்ட பட்டறை (பாராளுமன்றஆராய்ச்சி நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு)** |

## அத்தியாயம் - 03

## வருடத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று - இணைப்பு 02

### 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று - இணைப்பு 03

### 3.3 காசுப் பாய்ச்சல் கூற்று - இணைப்பு 04

### 3.4 ஒதுக்கப்பட்ட நிதியை உபயோகிப்பதன் செயலாற்றுகை

| நிதி வகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி | | உண்மைச் செலவு | பயன்படுத்தப்பட்ட நிதி, முடிவுறுத்தப்பட்ட இறுதி ஒதுக்கீட்டு அளவின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 4,209,800,000 | 4,172,614,646 | 3,704,264,979.52 | 89 |
| மூலதனம் | 940,200,000 | 977,815,354 | 167,536,484.96 | 17 |
| மொத்தம் | 5,150,000,000 | 5,150,430,000 | 3,871,801,464.48 | 75 |

### 3.5 நிதிசாராச் சொத்துக்களை அறிக்கைப்படுத்தலின் செயலாற்றுகை

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2025 ஆம் திகதிய பண்டக் கணக்கெடுப்பு அறிக்கையின் படியான மீதி | 31.12.2025 ஆம் திகதிய நிதி நிலைமை அறிக்கையின் படியான மீதி | எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்பட வேண்டியவை | முன்னேற்றம் % ஆக அறிக்கைப்படுத்தல் |
|---|---|---|---|---|---|
| **9151** | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 8,127,422,300 | 8,127,422,300 | - | 100% |
| **9152** | இயந்திர சாதனங்கள் | 1,712,080,003 | 1,712,080,003 | - | 100% |
| **9153** | காணிகள் | 12,249,226,000 | 12,249,226,000 | - | 100% |
| **9154** | புலனாகாச் சொத்துக்கள் | - | - | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **9155** | உயிரியல் சொத்துக்கள் | - | - | | |
| **9160** | நடைபெற்று வரும் வேலைகள் | - | - | | |
| **9180** | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | - | - | | |

## 3.6கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கை

(***இணைப்பு -5***)

## அத்தியாயம் – 04

## செயலாற்றுகைச் சுட்டி

## நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| இலக்கம் | விசேட சுட்டி | எதிர்பார்க்கப்பட்ட விளைவின் சதவீதமாக (%) உண்மை விளைவு | | |
|---|---|---|---|---|
| | | 100% - 90% | 75% – 89% | 50% – 74% |
| (1) | **படைக்கலச் சேவிதர் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுத் திறன்**<br>• சபாமண்டபம் மற்றும் பாராளுமன்றச் செயல்முறை முகாமைத்துவம்<br>• பாதுகாப்பு மற்றும் நுழைவுக் கட்டுப்பாடு<br>• சட்டதிட்டப் பரிச்சயங்களின் இசைவுத்தன்மை மற்றும் ஆளுகை முறைகள்<br>• பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கான சேவையின் தரம் | √ | | |
| (2) | **நிர்வாக வினைத்திறனுக்கான சுட்டி**<br>• மனிதவள வினைத்திறன்<br>• நிர்வாகக் காலமுறைமை<br>• அறிக்கைகளின் துல்லியத்தன்மை<br>• ஊழியர் திருப்தி நிலை<br>• இசைவுத்தன்மை மற்றும் போக்குவரத்துத் வினைத்திறன் | | √ | |
| (3) | **சட்டவாக்கச் சேவைத் வினைத்திறனுக்கான சுட்டி**<br>• சட்டவாக்கச் சேவைகள் வெளியீட்டின் காலமுறைமை<br>• துல்லியத்தன்மை மற்றும் சட்ட இசைவுத்தன்மை<br>• குழுக்கள் உதவிச் சேவை வினைத்திறன் | √ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | • டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் தகவல் அணுகல் | | | |
| (4) | **அதிகாரபூர்வ ஹன்சாட் செயலாற்றுகைச் சுட்டி**<br>• வார்த்தை மொழிபெயர்ப்புத் துல்லியத்தன்மை<br>• பிரசுரிப்பு காலமுறைமை<br>• குழு அறிக்கைகளின் வினைத்திறன்<br>• பொதுமக்களுக்கான அணுகல் | √ | | |
| (5) | **பொறியியல் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டச் செயலாக்க மட்டம்**<br>• பொறியியல் கருத்திட்டங்கள் நிறைவு வீதம்<br>முற்காப்பு நிருவாக இசைவு வீதம் (மின்பிறப்பாக்கி, மின்தூக்கி, வாயுச்சீராக்கி)<br>• பொறியியல் சேவைப் பதில்வினை நேரம் (மின் கோளாறுகள், நீர்க்குழாய்ப் பிரச்சினைகள், வாயுச்சீராக்கி தடங்கல்கள், சபாமண்டபச் சேவைகள்)<br>• உள்கட்டமைப்பு வசதி வழங்கல் மட்டம்<br>• பொறியியல் பாதுகாப்புப் பணிகள் நிறைவு வீதம் | | √ | |
| (6) | **நிதி முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனுக்கான சுட்டி**<br>• வரவுசெலவுத் திட்டத் தயாரிப்பும் கண்காணிப்பும்<br>• காலமுறைமை மற்றும் துல்லியமான கொடுப்பனவுகள்<br>• பெறுகைச் செயல்முறையின் வினைத்திறன்<br>• சொத்துக்கள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம்<br>• நிதி அறிக்கைகளின் துல்லியத்தன்மை<br>• உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றுகை | √ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (7) | **தகவல் கட்டமைப்புகள், முகாமைத்துவச் சேவைகள் மற்றும் புத்தாக்கச் செயலாற்றுகைச் சுட்டி**<br>• கட்டமைப்புகள் இயங்குநிலையில் இருத்தலும் நம்பகத்தன்மையும்<br>• சைபர் பாதுகாப்பு மற்றும் தரவுப் பாதுகாப்பு இசைவுத்தன்மை<br>• தகவல் தொழில்நுட்ப (IT) சேவைப் பதில்வினைத்திறன்<br>• டிஜிட்டல்மயமாக்கலும் பயன்பாடும்<br>• ஊழியர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ICT அறிவு | | √ | |
| (8) | **உணவு வழங்கல், வீடு பராமரிப்புச் சேவை வினைத் திறனுக்கான சுட்டி**<br>• உணவு வழங்கல் சேவைகளின் தரம்<br>• வீடு பராமரிப்புச் சேவைத் தரநிலைகள்<br>• நிகழ்வுகள் உதவிச் சேவைத் வினைத்திறன்<br>• சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு இசைவுத்தன்மை<br>• நிலையான அபிவிருத்தியும் வினைத்திறனும் | √ | | |

# அத்தியாயம் - 05

# நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதன் செயலாற்றுகை

| இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள் | இலக்குகள் | வெற்றிச் சுட்டிகள் | சதவீதம் % | | |
|---|---|---|---|---|---|
| | | | 0-49 | 50-74 | 75-100 |
| **அமைதியை சமாதானத்தை ஏற்படுத்தும், நீதி மற்றும் நியாயத்தை நிலைநிறுத்தும் பொறிமுறையை வலுப்படுத்துதல்** | அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புக்கூறத்தக்க மற்றும் வெளிப்படைத்தன் மை மிக்க நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல். | 16.6.1<br>அந்தந்தத் துறைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் ஒரு பகுதியாக அரசாங்கத்தின் முதன்மைச் செலவினங்கள்.<br>16.6.2<br>அரசாங்கச் சேவை பற்றிய தங்களது இறுதி அனுபவம் குறித்துத் திருப்தியடையும் மக்கள் தொகையின் விகிதாசாரம்.<br>**சுட்டிகள்:**<br>வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்காகப் பாராளுமன்றத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:<br>• பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் குழுச் செயற்பாடுகளை ஊடகங்களுக்குத் திறத்தல்.<br>• ஹன்சாட் மற்றும் குழு அறிக்கைகளைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் பிரசுரித்தல்.<br>• குழு நிகழ்ச்சி நிரல்களைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் | | | √<br>√<br>√<br>√<br>√ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பிரசுரித்தல்.<br>• திறந்த பாராளுமன்றச் செயல்முறை.<br>• பொதுசனத் தொடர்புத் திட்டங்கள்.<br><br>• தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை வழங்குதல்.<br><br>• தகவல்களைச் சுறுசுறுப்பாக வெளிப்படுத்துதல்.<br><br>• பாராளுமன்றச் செயல்முறைகளில் பொதுமக்களின் பங்களிப்பு.<br><br>16.7<br><br>தேசியப் பகிர்வுகளுடன் ஒப்பிடுகையில் அரச நிறுவனங்களின் பதவிகளின் விகிதாசாரம்<br><br>16.7.2<br><br>தீர்மானம் எடுத்தலில் பாலினம், வயது, இயலாமை நிலை மற்றும் சமூகப் பிரிவினரை உள்ளடக்குதலையும் அவற்றுக்கான பதில்வினைகளையும் நம்புகின்ற மக்கள் தொகையின் விகிதாசாரம்.<br><br>**சுட்டிகள்:**<br><br>கௌரவ சபாநாயகர், பாராளுமன்றத்தின் அரசியல் பிரதிநிதித்துவத் தலைவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் தலைமையின் கீழ் அரச கொள்கைக் கட்டமைப்பு குறித்த தீர்மானங்களை மேற்கொள்ளும் குழுக்கள், | | | √<br>√<br>√<br>√<br>√<br>√<br>√ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அதாவது:<br>• பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு<br>• வீட்டுக் குழுக்கள்<br>• தொடர்பாடல் குழுக்கள்<br>• பின்வரிசைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு<br>நிர்வாக நடவடிக்கைகள் / செயலாளரின் பணிகள்:<br>• பாராளுமன்றச் செயலாளர் நாயகம் / பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாட்டொகுதி பிரதானியும்/ பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் /திணைக்களத் தலைவர்கள் மற்றும் கௌரவ சபாநாயகர் ஆகியோருக்கு இடையில்<br>• திணைக்களத் தலைவர்கள் மற்றும் உயர் முகாமைத்துவத்துடன்<br>• பிரிவுத் தலைவர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடன்<br>• பிரிவுத் தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் | | | √<br>√<br>√<br>√ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 16.10<br><br>அரசியலமைப்பு மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்கப் பொதுமக்களுக்கான தகவல் அணுகலை உறுதிசெய்தல் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாத்தல். | 16.10.2<br><br>பொதுமக்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான அரசியலமைப்பு அல்லது கொள்கை ரீதியான உத்தரவாதம். | | | |
| | | **<u>சுட்டிகள்</u>** | | | √ |
| | | பொதுமக்களினால் பாராளுமன்ற இணையத்தளம் ஊடாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல். | | | √ |
| | | **கோரிக்கையின் பேரில்:** | | | |
| | | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் | | | √ |
| | | பாராளுமன்ற நூலகத்தின் மூலம் | | | |
| | | **பயனர்களின் எதிர்காலத் தகவல் தேவைகளுக்காக ஏற்கனவே தொகுக்கப்பட்டுள்ள ஆவணங்களை அணுகுதல்:** | | √ | √<br>√<br>√ |
| | | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் | | | |
| | | பொதுமக்கள் சேவைகள் | | √ | |
| | | ஆராய்ச்சிப் பிரசுரங்கள் | | | |
| | | குழு அறிக்கைகள் | | | |
| | | ஏனைய பாராளுமன்றப் பிரசுரங்கள் | | | |

## அத்தியாயம் - 06
## மனிதவள விபரம்

### 6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்

2025 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையும் தற்போது சேவையில் நியமிக்கப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கையும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பதவி நிலை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | | | | தற்போது உள்ள ஊழியர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பா. செ. நா | கௌரவ சபாநாயகர் | கௌரவ பிரதிச் சபாநாயகர் | கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் | பா.செ.நா | கௌரவ சபாநாயகர் | கௌரவ பிரதிச் சபாநாயகர் | கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் |
| சிரேட்ட மட்டம் | 68 | 5 | 5 | 5 | 58 | 4 | 3 | 4 |
| மூன்றாம் நிலை மட்டம் | 176 | - | - | - | 148 | - | - | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 268 | 1 | - | - | 214 | - | - | - |
| ஆரம்ப நிலை மட்டம் | 480 | 29 | 12 | 12 | 411 | 16 | 8 | 3 |
| அமைய / தற்காலிக | - | - | - | - | 3 | - | - | - |
| ஏனையவை (Dying cadre) | - | - | - | - | 3 | - | - | - |
| மொத்தம் | 992 | 35 | 17 | 17 | 841 | 20 | 11 | 7 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (31.12.2025 ஆம் திகதியில்) | | | | | | | | |

**6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகையின் தாக்கம்**

2025 ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தின் பணியாளர் குழாமில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் உண்மைப் பணியாளர் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்ட போதிலும், பிரதான பணிகளுக்குத் தங்குதடையின்றி அமையும் வகையில் மனிதவளத்தை உத்திநோக்கு ரீதியாக முகாமைத்துவம் செய்து பிரதான இலக்குகளைப் பயனுள்ளவாறு அடைந்துகொள்வது சவாலாக இருந்தது. எனினும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலமும் மனிதவளப் பற்றாக்குறையினால் ஏற்படும் தாக்கத்தை ஆகக்குறைந்த மட்டத்திற்குக் கொண்டுவர முடிந்தது. சேவைத் தேவைகளுக்கு ஏற்ப, வெற்றிடமாகவுள்ள பதவிகளில் பெரும்பாலானவற்றுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஏனைய வெற்றிடங்களுக்கான உரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளையும் 2026 ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**6.3 மனிதவள அபிவிருத்தி**

**(இணைப்பு 06)**

## அத்தியாயம் - 07

## இணக்க அறிக்கை

| இலக்கம் | ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கான தேவைப்பாடு | இசைவுத்தன்மை நிலைமை (இசைவானது/ இசைவற்றது) | இசைவற்றதாயின் அதற்கான சுருக்கமான விளக்கம் | இசைவற்ற தன்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காக முன்மொழியப்படும் திருத்தச் செயன்முறை நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1 | 1. பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் குறித்த திகதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன : | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இசைவானது | | |
| 1.2 | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | இசைவானது | | |
| 1.3 | வியாபார மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | ஏற்புடையதன்று | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று | | |
| 1.6 | ஏனையவை | ஏற்புடையதன்று | | |
| **2** | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பேணுதல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துக்கள் | இசைவானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணுதல். | | | |
| 2.2 | தனிநபர் சம்பளப் பதிவேடுகள் / தனிநபர் சம்பள அட்டைகளை இற்றைப்படுத்திப் பேணுதல். | இசைவானது | | |
| 2.3 | கணக்காய்வு ஐய வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணுதல். | இசைவானது | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணுதல். | இசைவானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்தக் கணக்குச் சுருக்கங்களையும் (CIGAS) தயாரித்து குறித்த திகதியில் திறைசேரிக்குச் சமர்ப்பித்தல். | இசைவானது | | |
| 2.6 | காசோலைகள் மற்றும் பணக்கட்டளைகள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணுதல். | இசைவானது | | |
| 2.7 | இருப்புப் பதிவேட்டை (Inventory Register) இற்றைப்படுத்திப் பேணுதல். | இசைவானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணுதல். | இசைவானது | | |
| 2.9 | சேதங்கள் மற்றும் இழப்புகள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணுதல். | இசைவானது | | |
| 2.10 | பொறுப்புக்கள் பதிவேட்டை | இசைவானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | இற்றைப்படுத்திப் பேணுதல். | | | |
| 2.11 | துணைப் பத்திரப் புத்தகப் பதிவேட்டை (GA-N20) இற்றைப்படுத்திப் பேணுதல். | இசைவானது | | |
| **3** | **நிதி நிருவாக்கத்திற்காகப் பணிகளை அதிகாரப் பகிர்வு செய்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிறுவனத்தினுள்ளே நிதி அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல். | இசைவானது | | |
| 3.2 | நிதி அதிகாரப் பகிர்வு குறித்து நிறுவனத்தினுள்ளே விழிப்புணர்வூட்டப்பட்டிருத்தல். | இசைவானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகளின் ஊடாக அங்கீகரிக்கப்படும் வகையில் அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல். | இசைவானது | | |
| 3.4 | 2014.05 11 ஆந் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி, அரசாங்கச் சம்பளப்பட்டியல் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்தும்போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுதல். | இசைவானது | | அரசாங்கச் சம்பளப்பட்டியல் மென்பொருள் தொகுப்பிற்குப் பதிலாக மேலும் மேம்படுத்தப்பட்ட மென்பொருள் தொகுப்பொன்றைப் பயன்படுத்துதல். |
| **4** | **வருடாந்த திட்டங்களைத்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | **தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல். | இசைவானது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல். | இசைவானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல். | இசைவானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு (NDB) குறித்த திகதிக்குச் சமர்ப்பித்தல். | இசைவானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கையைக் குறித்த திகதிக்குத் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல். | இசைவானது | | |
| **5** | **கணக்காய்வு ஐய வினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் குறிக்கப்பட்டுள்ள திகதிக்கு, அனைத்துக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில்கள் வழங்கப்பட்டிருத்தல். | இசைவானது | | |
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) DMA/ 1-2019 இன் படி, வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதியுடன் | இசைவானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கலந்துரையாடியதன் பின்னர், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல். | | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டிருத்தல். | இசைவானது | | |
